# www.Padasalai.Net

பாடசாலை

படங்களை தொடுக! பாடசாலை வலைதளத்தை சமூக ஊடகங்களில் பின்தொடர்க!! உடனுக்குடன் புதிய செய்திகளை Notifications-ல் பெறுக!

Zoom Touch Below Links Download!

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **12th Standard** | Syllabus | Books | Study Materials – EM | Study Materials - TM | Practical | Online Test (EM & TM) |
| | Monthly Q&A | Mid Term Q&A | Revision Q&A | PTA Book Q&A | Centum Questions | Creative Questions |
| | Quarterly Exam | Half Yearly Exam | Public Exam | NEET | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **11th Standard** | Syllabus | Books | Study Materials – EM | Study Materials - TM | Practical | Online Test (EM & TM) |
| | Monthly Q&A | Mid Term Q&A | Revision Q&A | Centum Questions | Creative Questions | |
| | Quarterly Exam | Half Yearly Exam | Public Exam | NEET | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **10th Standard** | Syllabus | Books | Study Materials - EM | Study Materials - TM | Practical | Online Test (EM & TM) |
| | Monthly Q&A | Mid Term Q&A | Revision Q&A | PTA Book Q&A | Centum Questions | Creative Questions |
| | Quarterly Exam | Half Yearly Exam | Public Exam | NTSE | SLAS | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **9th Standard** | Syllabus | Books | Study Materials | 1st Mid Term | 2nd Mid Term | 3rd Mid Term |
| | Quarterly Exam | Half Yearly Exam | Annual Exam | RTE | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **8th Standard** | Syllabus | Books | Study Materials | 1st Mid Term | 2nd Mid Term | 3rd Mid Term |
| | Term 1 | Term 2 | Term 3 | Public Model Q&A | NMMS | Periodical Test |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **7th Standard** | Syllabus | Books | Study Materials | 1st Mid Term | 2nd Mid Term | 3rd Mid Term |
| | Term 1 | Term 2 | Term 3 | Periodical Test | SLAS | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **6th Standard** | Syllabus | Books | Study Materials | 1st Mid Term | 2nd Mid Term | 3rd Mid Term |
| | Term 1 | Term 2 | Term 3 | Periodical Test | SLAS | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **1st to 5th Standard** | Syllabus | Books | Study Materials | Periodical Test | SLAS | |
| | Term 1 | Term 2 | Term 3 | Public Model Q&A | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **Exams** | TET | TNPSC | PGTRB | Polytechnic | Police | Computer Instructor |
| | DEO | BEO | LAB Asst | NMMS | RTE | NTSE |

| | | | |
|---|---|---|---|
| **Portal** | Matrimony | Mutual Transfer | Job Portal |

| | | | |
|---|---|---|---|
| **Volunteers** | Centum Team | Creative Team | Key Answer Team |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **Downloads** | LESSON PLAN | Department Exam | Income Tax | Forms & Proposals | Fonts | Downloads |
| | Proceedings | GO's | Regulation Orders | Pay Orders | Panel | |

**Padasalai – Official Android App – Download Here**

**Kindly Send Your Study Materials, Q&A to our Email ID** – Padasalai.net@gmail.com

## P.RATHINASAMY, BT SCIENCE, PUMS, PONNAMMALPATTI, THENI DT.

## ஏழாம் வகுப்பு சமூக அறிவியல்

### 1.இடைக்கால இந்திய வரலாற்று ஆதாரங்கள்

1. கி.பி 700 முதல் 1200 மற்றும் கி.பி1200 முதல் 1700 வரையிலான காலப்பகுதிகள் முறையே தொடக்க, இடைக்கால இந்திய வரலாறு என்றும் பின் இடைக்கால இந்திய வரலாறு என்றும் வகைப்படுத்தப்பட்டுள்ளன.
2. சான்றுகள் முதல்நிலைச் சான்றுகள், இரண்டாம் நிலைச் சான்றுகள் என வகைப்படுத்தப்படு கின்றன.
3. ஔரங்கசீப்பின் அவைக்கள வரலாற்று அறிஞராக இருந்தவர் கா.ஃபிகான் கடந்தகாலத்தை மறுகட்டுமானம் செய்வதற்கு உதவக்கூடிய ஆதாரங்களான ஆவணங்கள் அல்லது பதிவுகளே **சான்றுகள்** எனப்படும்.
4. **பொறிப்புகள்**, (கல்வெட்டுகள், செப்புப்பட்டயங்கள்), **நினைவுச்சின்னங்கள்**, **நாணயங்கள்** ஆகியவையும் அவற்றிலிருந்து கிடைக்கப் பெறுகின்றசெய்திகளும் **முதல்நிலைச்** சான்றுகள் ஆகும்.
5. **இல்துமிஷ்**, **அலாவுதீன் கில்ஜி** ஆகியோரின் நாணயங்கள், பிற்கால முஸ்லீம் அரசவகளின் செப்பு நாணயங்கள் ஆகியவைபற்றி விவாதிக்கப்பட்டுள்ளது.
6. இலக்கியங்கள், காலவரிசையிலான நிகழ்வுப்பதிவுகள், பயணக்குறிப்புகள் வாழ்க்கை வரலாற்று நூல்கள், சுயசரிதைகள் ஆகியன இரண்டாம் நிலைச்சான்றுகள் ஆகும்.
7. பொறிப்புகள் என்பன பாறைகள், கற்கள், கோயிற்சுவர்கள், உலோகங்கள் ஆகியவற்றின் கடினமான மேற்பரப்பின் மேல் பொறிக்கப்படும் எழுத்துக்களாகும்.
8. ஹம்பியிலுள்ள வித்தாலா, விருப்பாக்சா கோவில்கள் விஜயநகர அரசர்களின் (15ஆம் நூற்றாண்டு) பங்களிப்பைப் பறைசாற்றுபவையாகும்.
9. குவ்வத்-உல்-இஸ்லாம் மசூதி, மோத்-கி-மசூதி, ஜமாமசூதி, பதேப்பூர் சிக்ரி தர்கா (இவையனைத்தும் டெல்லியிலும் அதற்கருகாமையிலும் அமைந்துள்ளன), சார்மினார் (ஹைதராபாத்) ஆகியன இடைக்காலத்தைச் சேர்ந்தமுக்கிய மசூதிகளாகும்
10. ஜெய்பூர், ஜெய்சால்மர், ஜோத்பூர் ஆகிய இடங்களிலுள்ளஅரண்மனைகள், ராஜபுத்திரர்களின் மேன்மைக்கான அடையாளங்களாகும்.
11. குதுப்மினார், அலெய்-தர்வாஷா மற்றும் இல்துமிஷ், பால்பன் ஆகியோரின் கல்லறைகள், அனைத்து முகலாய அரசர்களின் கல்லறைகள் ஆகியவை மதிப்புமிக்க சான்றுகளாக அங்கீகரிக்கப்பட்ட சிறப்பு மிக்க கட்டடங்களாகும்.
12. நாணயங்களில் உள்ள உலோகங்களின் கலவை பேரரசின் பொருளாதார நிலை குறித்த செய்திகளை வழங்குகின்றன.
13. முகமதுகோரி தான் வெளியிட்டதங்கநாணயத்தில் பெண்தெய்வமான இலட்சுமியின் வடிவத்தைப் பதிப்பித்துத்தனது பெயரையும் பொறிக்கச் செய்திருந்தார்
14. டெல்லி சுல்தான்களின் காலகட்டத்தைஅறிந்துகொள்ள'ஜிட்டல்' என்னும் செப்பு நாணயங்கள் பயன்படுகின்றன.
15. இல்துமிஷ் அறிமுகம் செய்த'டங்கா' எனப்படும் வெள்ளி நாணயங்கள், அலாவுதீன் கில்ஜியின்

PUMS, PONNAMMALPATTI
Padasalai.Net

தங்கநாணயங்கள், முகமதுபின் துக்ளக்கின் செப்பு நாணயங்கள் போன்றவை நாணயங்கள் பரவலான பயன்பாட்டில் இருந்ததை உணர்த்துகிறது 16.

ஒரு ஜிட்டல் 3.6 வெள்ளி குன்றிமணிகளைக் கொண்டதாகும்.

17. 48 ஜிட்டல்கள் 1 வெள்ளி டங்காவுக்குச் சமமாகும்

18. சோழர்களின் காலம் பக்தி இலக்கியங்களின் காலம் என்று அழைக்கப்படுகின்றது.

19. 'கம்பராமாயணம்', சேக்கிழாரின் 'பெரியபுராணம்', பன்னிரு ஆழ்வார்களால் இயற்றப்பட்டு நாதமுனியால் தொகுக்கப்பட்ட 'நாலாயிர திவ்விய பிரபந்தம்', அப்பர், சம்பந்தர், சுந்தரர் ஆகியோரால் இயற்றப்பட்டு நம்பியாண்டார் நம்பியால் தொகுக்கப்பட்ட 'தேவாரம்', மாணிக்கவாசகரின் 'திருவாசகம்' ஆகியவைசோழர்காலப் பக்தி இலக்கியங்களாகும்.

20. ஜெயதேவரின் 'கீதகோவிந்தம்' (12 ஆம் நூற்றாண்டு) தென்னிந்திய பக்தி இலக்கிய மரபின் தொடர்ச்சியாகும்.

21. பதினைந்தாம் நூற்றாண்டைச் சேர்ந்த இறைநிலை உணர்வு பெற்ற கவிஞரான கபீர்தாஸ் பக்தி இயக்கத்தால் கவரப் பெற்றவராவார்.

22.மதுராவிஜயம்' கங்காதேவியால், இயற்றப்பட்டது

23.கிருஷ்ணதேவராயர் -- 'அமுக்தமால்யதா'

24.சந்த்பார்தை என்பார் படைத்த 'பிருதிவி ராஜ ராசோ' (ராஜபுத்திர அரசர்களின் மனத்துணிச்சலைப் படம் பிடித்துக் காட்டுகின்றது)

25. இஸ்லாமுக்கு முந்தைய காலம் குறித்து உள்ளஒரேசான்று கல்ஹணரின் 'ராஜதரங்கினி' (11ஆம் நூற்றாண்டு) மட்டுமே.

26. அடிமைவம்சத்தைச் சேர்ந்த சுல்தான் நஸ்ருதின் மாமூதுவால் ஆதரிக்கப்பட்ட மின்கஜ் 27. உஸ்சிராஜ் என்பார் 'தபகத்-இ-நஸிரி' எனும் நூலை எழுதினார்.

28. ஹசன் நிஜாமி என்பார் 'தாஜ்-உல்-மா-அசிர்' எனும் நூலைஎழுதினார்.

29. குத்புதீன் ஐபக் பற்றிய பல செய்திகளை'தாஜ்-உல்-மா-அசிர்' நூல் முன்வைக்கிறது. இந்நூலே டெல்லி சுல்தானியத்தின் வரலாற்றைக் கூறும், அரசின் இசைவு பெற்ற முதல் நூலாகும்.

30. முகமது பின் துக்ளக்கின் அரசவை வரலாற்றாசிரியர் ஜியா-உத்-பரணி 'தாரிக்-இ-பிரோஷாகி' எனும் நூலைப் படைத்தார்

31. ரிஷ்டாவின் தாரிக்-இ-பெரிஷ்டா இந்தியாவில் முகலாய ஆட்சியின் எழுச்சி குறித்து விவரிக்கின்றது

32.தபகத்- அராபியச் சொல் - தலைமுறைகள் அல்லது நூற்றாண்டுகள் என்று பொருள்.

33. தஜூக்- பாரசீகச் சொல் – சுயசரிதை எனப் பொருள்.

34. தாரிக் அல்லது தாகுயூக்– அராபியச் சொல் - இதன் பொருள் வரலாறு என்பதாகும்.

35. பாபர்--- 'பாபர் நாமா', எனும் நூலைப் படைத்தார்

37. அபுல் பாசல் -- 'அயினி அக்பரி', 'அக்பர் நாமா' எனும் நூலைப் படைத்தார்

38. ஜஹாங்கீர் -- "தசுக்-இ-ஜாஹாங்கீரி" எனும் நூலைப் படைத்தார்

39. நிஜாமுதீன் அகமத் என்பவரால் "தபகத்-இ-அக்பரி" எனும் நூல் எழுதப்பட்டது.

40. பதானி என்பவரால் "தாரிக்-இ- பதானி" எனும் நூல் எழுதப்பட்டது

41. பாண்டிய அரசு வலிமை வாய்ந்த சக்தியாக மாறிக் கொண்டிருந்த பொழுதில் வெனிஸ்நகரைச் சேர்ந்த பயணி மார்கோபோலோ வருகை புரிந்தார்.

42. அல்-பரூனி --- தாகுயூக்-இ-ஹிந்த்" எனும் நூலைப் படைத்தார்

42. அராபியாவில் பிறந்தமொராக்கோ நாட்டு அறிஞரான இபன் பதூதா மொராவின் பயணநூல் ( ரிக்ளா [பயணங்கள்] )
43. சுல்தான் முகமது பின் துக்ளக் தலைநகரை டெல்லியிலிருந்து தெற்கேயிருந்த தேவகிரிக்கு (தௌலதாபாத்) மாற்றி டெல்லியைப் பொட்டற்காடாக்கினார்
44. நிகோலோகோண்டி எனும் இத்தாலியப் பயணி 1420இல் விஜயநகர் வந்தார்.
45. 1443இல் மத்திய ஆசியாவின் ஹீரட் நகரிலிருந்து அப்துர் ரஸாக்விஜயநகருக்கு வந்தார்
46. ஹீரட் மத்திய ஆசியாவின் மாபெரும் அரசனான செங்கிஸ்கானின் அரசவை இருந்தஇடம்.
47.போர்த்துகீசியப் பயணியான டோமிங்கோபயஸ் 1522 இல் விஜயநகருக்கு வருகைதந்தார்.

## 2.வடஇந்தியப் புதிய அரசுகளின் தோற்றம்

1. ராஜபுதனம் என்பது ராஜபுத்திர அரசுகளின் கூட்டமைப்பால் ஆனது. அவற்றுள் மிகவும் புகழ் பெற்றது சித்தூர்ஆகும்.
2. அனைத்து ராஜபுத்திர இனக்குழுவினரும் ஒருங்கிணையும் மையமாகச் சித்தூர் விளங்கிற்று
3. சித்தூரின் ராணா (அரசர்) மாளவத்தைவெற்றி கொண்டதன் நினைவாக 'ஜெய ஸ்தம்பா' எனும் வெற்றித்தூண்சித்தூரில் நிறுவப்பட்டது.
'4. ராஜபுத்' எனும் சொல் 'ரஜ்புத்ர' எனும் சமஸ்கிருதச் சொல்லிலிருந்து பெறப்பட்டதாகும்.
5. ரஜ்புத்ர-- ன் பொருள் அரசவம்சரத்தத்தின் வாரிசு அல்லது வழித்தோன்றல் என்பதாகும்.

6. ராஜபுத்திரர்களின் மிக முக்கியமானமூன்று குலங்கள் 'சூரிய வம்சி' எனும் சூரிய குலம், 'சந்திர வம்சி' எனும் சந்திர குலம், அக்னி குலம் (நெருப்பிலிருந்து தோன்றியவர்கள்) என்பனவாகும்.
7. பிரதிகாரர்கள், சௌகான்கள், சோலங்கிகள் என்றழைக்கப்பட்டசாளுக்கியர்கள் பவாரைச் சேர்ந்த பரமாரர்கள் எனப்படுவோராவர். இந்நான்கு குலமரபினரும் அக்னிகுலத் தோன்றல்கள் ஆவர்.
8. ஆறாம் நூற்றாண்டில் ஹரிச்சந்திரா என்பவர் கூர்ஜர அரசவம்சத்தின் அடிக்கல்லை நாட்டினார்.
9. பிரதிகார அரசர்களுள் முதலாவது மற்றும் முக்கியமானஅரசர்முதலாம் நாகபட்டர் என்பவராவார்
10. பால அரசவம்சத்தை உருவாக்கியவர் கோபாலர்.
11. தர்மபாலர், மிகச் சிறந்த பௌத்த ஆதரவாளராவார்.
12. தர்மபாலரால் உருவாக்கப்பட்ட விக்கிரமசீலா மடாலயம் பௌத்தக் கல்விக்கான மிகச் சிறந்த மையமாயிற்று.
13. தர்மபாலருடைய மகன் **தேவபாலர்** தலைசிறந்த **பௌத்த** ஆதரவாளர்ஆவார்
14. **முதலாம் மகிபாலர்** பால வம்சத்தின் மிகச் சிறந்த, வலிமைமிக்கஅரசர் ஆவார். அவர் **இரண்டாம் பால வம்சத்தைத்** தோற்றுவித்தவர்ஆவார்
14.சௌகான்கள் கி.பி. 956 முதல் 1192 வரைஇன்றைய ராஜஸ்தானின் கிழக்குப் பகுதிகளைச் **சாகம்பரி நகரில்** தலைநகரை நிறுவி ஆட்சி புரிந்தவர்களாவர்.
15. இந்த ராஜபுத்திர அரசவம்சத்தைத் தோற்றுவித்தவர் **சிம்மராஜ்** என்பவராவார். இவர் **ஆஜ்மீர்**நகரைத் தோற்றுவித்தவர் எனவும் அறியப்படுகின்றார்.

16. சௌகான்கள் பிரதிகாரர்களுக்குக் கட்டுப்பட்ட**குறுநில** மன்னர்களாய் இருந்தவராவர்
17. பிருதிவிராஜ் **1191**ஆம் ஆண்டு நடைபெற்றமுதல் தரெய்ன் போரில் **முகமது கோரியைத்** தோற்கடித்தார்.



PUMS,PONNAMMALPATTI

**P.RATHINASAMY, BT SCIENCE, PUMS, PONNAMMALPATTI, THENI DT.**

18.பிருதிவிராஜ் **1192** இல் நடைபெற்ற **இரண்டாம் தரெய்ன்** போரில் அவர் தோற்கடிக்கப் பட்டுக் கொல்லப்பட்டார்

19. ராஜபுத்திர பாணியிலானஓவியங்கள் "**ராஜஸ்தானி**"என்றழைக்கப்படுகின்றன.

20. ராஜஸ்தானி பாணியிலானஓவியங்கள் **பிக்கனேர்**, **ஜோத்பூர்**.**மேவார்**(உதய்பூர்), **ஜெய்சால்மர்**(ராஜஸ்தான்), **புரி** (ஹரியானா) ஆகிய இடங்களில் காணக்கிடைக்கின்றன.

21. ராஜபுத்திரர்களின் குடியிருப்புக் கட்டடக்கலைக்கு எடுத்துக்காட்டுகளாக விளங்குபவை குவாலியரிலுள்ள **மான்சிங் அரண்மனை**, **ஆம்பர்(ஜெய்ப்பூர்) கோட்டை**, உதய்பூரில் **ஏரியின்** நடுவே அமைந்துள்ள அரண்மனை ஆகியவைகளாகும்

22.**ஜோத்பூரில்** (ராஜஸ்தான்) உள்ள மாளிகை எளிதில் ஏற முடியாத மலைப்பாறையின் மேல், நகரை நோக்கிய வண்ணம் அமைக்கப்பட்டுள்ளது.

23. **கஜுராகோ**எனும் இடத்திலுள்ளகோவில்கள், **கொனார்க்**கிலுள்ள சூரியனார் கோவில், **அபு** குன்றின் மீது கட்டப்பட்டுள்ள **தில்வாரா** சமணக்கோவில், மத்தியப்பிரதேசத்தில் அமைந்துள்ள**காந்தர்யா** கோவில் ஆகியன ராஜபுத்திரர்களின் கோவில் கட்டடக்கலைக்கு உன்னதமான எடுத்துக்காட்டு களாகும்.

24. **ஓசியா**ன் என்னுமிடத்தில் பதினாறு இந்து மற்றும் சமணக் கோவில்கள் உள்ளன.

**அதிசா** விக்கிரமசீலா மடாலயத்தின் தலைவராக இருந்தார்.

25.பாலர்களின் ஆதரவால் புதிய கலைப்பள்ளி ஒன்று உருவானது. இது "**பாலர்களின் கலை**" அல்லது "**கிழக்கு இந்தியக் கலை**" என்று அழைக்கப்பட்டது.

26. **ரக்ஷாபந்தன்** (ராக்கி) எனும் பண்பாட்டு மரபானது ராஜபுத்திரர்களுக்கு உரியதாகும். '

27. **ரக்ஷா'** எனில் பாதுகாப்பு என்றும், '**பந்தன்'** என்பது கட்டுதல் அல்லது உறவு என்னும் பொருளாகும்.

28. இஸ்லாம் அராபியாவிலுள்ள **மெக்காவில்** தோன்றியது.

29. இஸ்லாம் இதனைத் தோற்றுவித்தவர் இறைதூதர் **முகமது நபிகள்** நாயகமாவார்.

30. இஸ்லாமைப் பின்பற்றுபவர்கள் **முஸ்லீம்கள்** என அழைக்கப்படுகின்றனர்.

31. ஓர்இஸ்லாமிய அரசு அரசியல் ரீதியாகவும், மதரீதியாகவும் ஒரேநபரால் ஆளப்பட்டால் அவ்வரசு **கலீஃபத்** என்றழைக்கப்பட்டது.

32. கலீஃபா என்னும் சொல்லுக்கு, **இறைதூதர்** முகமது நபிகளின் பிரதிநிதி என்று பொருளாகும்.

33. "**உமையத்துகளும்**" "**அப்பாசித்துகளும்**" தொடக்கக்கால கலீஃபத்துகளாகும்.

34. கஜினி மாமூது இந்தியாவின் மீது **சூறையாடலை** நோக்கமாகக் கொண்ட திடீர் படையெடுப்புகளைப் **பதினேழு** முறை நடத்தியதாகக் கூறப்படுகிறது.

35. மாமூது மிகவும் புகழ் பெற்ற **சோமநாதபுரம்** கோவிலைக் கொள்ளையடித்து அங்கிருந்த கடவுள் சிலையைஉடைத்ததாகவும் சொல்லப்படுகிறது

36. **முதலாம் தரெய்ன் போர்** ---பிருதிவிராஜ் சௌகான் 1191இல் டெல்லிக்கு அருகே தரெய்ன் எனுமிடத்தில் நடைபெற்ற போரில் முகமது கோரியைத் தோற்கடித்தார்.

37. **1192-இரண்டாம் தரெய்ன் போரில்** பிருதிவிராஜின் படைகளைமுற்றிலுமாகத் தோற்கடித்த முகமதுகோரி அவரைக் கைது செய்து கொன்றார்.

38. முகமது கோரியின் தளபதி **குத்புதீன் ஐபக்** முகமது தன்னை"**டெல்லியின் முதல் சுல்தான்**" எனப் பிரகடனப்படுத்திக்கொண்டார்.

## 3. தென்இந்தியப் புதிய அரசுகள் பிற்காலச் சோழர்களும், பாண்டியர்களும்

PUMS, PONNAMMALPATTI
Padasalai.Net

**P.RATHINASAMY, BT SCIENCE, PUMS, PONNAMMALPATTI, THENI DT.**

1. பண்டைய சோழ அரசு **காவிரி** ஆற்றின் கழிமுகப்பகுதியை மையப்பகுதியாகக் கொண்டிருந்தது. அதன் தலைநகர்**உறையூர்**(இன்றைய திருச்சிராப்பள்ளி) ஆகும்.

2. **முதலாம் ராஜராஜன்** (புகழ் பெற்ற ராஜராஜேஸ்வரம் கோவிலைத் (**பிரகதீஸ்வரர்** கோவில்) தஞ்சாவூரில் கட்டினார்.

3. முதலாம் ராஜேந்திரன் **கங்கை கொண்டான்** (கங்கையைக் கைப்பற்றியவர்) என்று தன்னைப் பிரகடனப்படுத்திக் கொண்டார்.

4. 1279 இல் பாண்டிய அரசன் முதலாம் **மாறவர்மன் குலசேகர பாண்டியன்** மூன்றாம் ராஜேந்திர சோழனைத் தோற்கடித்துப் பாண்டியர்ஆட்சியை நிறுவினார்.

5. அரசரின் ஆணைகள் அவருடைய அதிகாரிகளால் **பனையோலைகளில்** எழுதப்பட்டன அல்லது **கோவில் சுவர்களில்** பொறிக்கப்பட்டன.

6. அரசர்தனது **மூத்த மகனைத்** தனது வாரிசாகத் தெரிவு செய்தார்.

7. மூத்த மகன் **யுவராஜன்** என்றழைக்கப்பட்டார்.

8. சோழ அரசர்கள் நிர்வாகமுறை: **பேரரசு --->மண்டலம்-> நாடு -> கூற்றங்கள்** (கிராமங்களின் தொகுப்பு) .

9. **கிராமமே** நிர்வாக அமைப்பின் மிகச் சிறிய அலகாகும்

10.**பிராமணர்** பொது நிர்வாகத்தையும், நிதி நிர்வாகத்தையும், நீதி வழங்குதலையும் மேற்கொண்டனர்.

22. வணிகர்களின் குடியிருப்புகளை **நகரத்தார்** நிர்வகித்தனர்.

23. **நாட்டார்** எனும் அமைப்பு நாடோடு தொடர்புடைய பூசல்களையும் ஏனைய சிக்கல்களையும் தீர்த்து வைத்தது.

24. காஞ்சிபுர மாவட்டத்திலுள்ள **உத்திரமேரூர்** கிராமம் பிராமணர்களுக்குக் கொடையாக வழங்கப்பட்ட ஒரு பிரம்மதேய கிராமமாகும்.

25. சோழஅரசின் வருவாய் **நிலவரி** மூலம் பெறப்பட்டது.

26. நிலவரியானது '**காணிக்கடன்**' என அழைக்கப்பட்டது.. மகசூலில் **மூன்றில் ஒரு பகுதி** வரியாக வசூலிக்கப்பட்டது

27. சமணசமய நிறுவனங்களுக்குக் கொடையாக வழங்கப்பட்ட நிலங்கள் '**பள்ளிச்சந்தம்**' என அழைக்கப்பட்டது.

'28. **வேளாண் வகை'** என்னும் நிலங்களின் உடைமையாளர்கள் வேளாளர் என்றழைக்கப்பட்டனர்.

29. மொத்த விளைச்சலில் வேளாண்வகை நிலவுடைமையாளர்கள் '**மேல்வாரத்தைப்**' (விளைச்சலில் பெரும்பகுதி) பெற்றனர்.

30. **உழுகுடிகள்** 'கீழ்வாரத்தைப்' (விளைச்சலில் சிறிய பகுதி) பெற்றனர்.

'31. **அடிமை'** மற்றும் '**பணிசெய்மக்கள்**' என்போர் சமுதாயத்தின் கீழ் நிலையில் இருந்தனர்.

32. சமூகத்தின் இடைமட்டத்தில் **போர்** செய்வோரும் **வணிகர்களும்** இடம் பெற்றனர்.

33. கங்கைகொண்ட சோழபுரத்தில் பதினாறு மைல் நீளம் கொண்ட ஏரிக்கரைத் தடுப்பணை **முதலாம் ராஜேந்திர சோழனால்** உருவாக்கப்பட்டது

35. சோழர்கள் **சைவத்தின்** மீது மிகுதியான பற்றுக் கொண்டவராவர்.

36. சிவபெருமானின் திருவிளையாடல்கள் சைவ அடியார்களான **நாயன்மார்களால்** பாடல்களாகஇயற்றப்பட்டுள்ளன.

37. **நம்பியாண்டார்நம்பியால்** தொகுக்கப்பட்ட அவை' திருமுறைகள்' என அழைக்கப்படுகின்றன.

38. சோழர்கள் காலத்தில் **தஞ்சாவூர்**, **கங்கைகொண்ட சோழபுரம்**, **தாராசுரம்** ஆகிய இடங்களில் பிரமாண்டமான கோவில்கள் கட்டப்பட்டன.

PUMS, PONNAMMALPATTI
Padasalai.Net

www.Padasalai.Net www.CBSEtips.in



39. முதலாம் ராஜேந்திரன் எண்ணாயிரம் (தற்போதைய விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள) எனும் கிராமத்தில் வேதக் கல்லூரி ஒன்றைநிறுவினார்.

'40. **பெரியபுராணமு**ம் **கம்பராமாயணமும்**' சோழர் காலப்பகுதியைச் சேர்ந்தவையாகும்.

41. சோழர்களின் காலத்தில். **'அஞ்சு – வண்ணத்தார்'**, **'மணி – கிராமத்தார்'** எனப்படும் வணிகக் குழு அமைப்புகளைச் (கில்டு) சேர்ந்த வணிகர்கள் வணிக நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

42. **அஞ்சு – வண்ணத்தார்** குழுவானது மேற்கு ஆசியர்கள், அராபியர்கள், யூதர்கள், கிறித்தவர்கள், இஸ்லாமியர்கள் ஆகியோரைஉள்ளடக்கியதாகும்.

43. **மணி – கிராமத்தார்** வணிகக் குழு அமைப்பைச் சேர்ந்த வணிகர்கள்

44. காலப்போக்கில் அவ்விரு அமைப்புகளும் 'ஐநூற்றுவர்', 'திசை- ஆயிரத்து ஐநூற்றுவர்' எனும் பெயர்களில் ஒருங்கிணைந்தன.

45. முத்துக்குளித்தலோடு தொடர்புடையது கொற்கை துறைமுகம் பாண்டியர்ககளின் துறைமுகமாகவும் தலைநகரமாகவும் இருந்தது.

46. சங்ககாலப் பாண்டியர்களின் கீழ் மதுரை நகர் மாபெரும் பண்பாட்டு மையமாகத் திகழ்ந்தது.

47. கடுங்கோன் எனும் பாண்டிய அரசன் 6ஆம் நூற்றாண்டின் இறுதியில் களப்பிரர் களிடமிருந்து பாண்டியர்களின் பகுதிகளை மீட்டார்.

48. அரிகேசரி மாறவர்மன் சமணர்களைத் துன்புறுத்திய கூன் பாண்டியனே என அடையாளப்படுத்தப்படுகிறார்.

49. சைவத் துறவியான திருஞானசம்பந்தர் அரிகேசரியைச் சமண மதத்திலிருந்து சைவத்திற்கு மாற்றினார்.

50. **ஜடிலபராந்தக நெடுஞ்சடையன்** (முதலாம் வரகுணன்) (756 - 815) வேள்விக்குடிச் செப்பேடுகளின் கொடையாளி ஆவார்.

51. **மதுரை** பாண்டியர்களின் தலைநகராகத் தொடர்ந்தது.

52. **காயல்** பாண்டியர்களின் முக்கியத் துறைமுகமாயிற்று.

53. வெனிஸ்நாட்டைச் சேர்ந்தபுகழ்பெற்ற பயணியான **மார்க்கோபோலோ** இரண்டு முறை (1288, 1293) காயலுக்கு வருகைதந்தார்.

54. பாண்டிய அரசு "செல்வச் செழிப்பு மிக்க, உலகிலேயே மிக அற்புதமான பகுதியாகும்" என **மார்க்கோபோலா** புகழாரம் சூட்டுகிறார்

55. இரண்டாம் பாண்டியப்பேரரசின் புகழ்பெற்ற **அரசர்சடைய வர்மன் (ஜடாவர்மன்**) சுந்தரபாண்டியன் (1251 - 1268) ஆவார்.

56. அரசர்களும் உள்ளூர் தலைவர்களும் '**மங்கலம்**' அல்லது 'ச**துர்வேதிமங்கலம்'** எனும் பிராமணர் குடியிருப்புகளை உருவாக்கினர். இவை நீர்ப்பாசன வசதிகளோடு உருவாக்கப்பட்டிருந்தன.

57. நிலத்தின் உண்மையான உடைமையாளர்கள் **'பூமி புத்திரர்'** அல்லது '**வேளாளர்**' என விவரிக்கப்பட்டுள்ளனர்

58. பிரதம மந்திரி '**உத்தர மந்திரி'** என அழைக்கப்பட்டார்.

59. முக்கிய வரலாற்று ஆளுமைகளான **மாணிக்கவாசகர், குலச்சிறையார், மாரன்காரி** ஆகியோர்அமைச்சர்களாகப்பணியாற்றினர்.

60. அரசுச் செயலகம் 'எழுத்து மண்டபம்' என அழைக்கப்பட்டது.

61. பள்ளி-வேலன்', 'பராந்தகன்-பள்ளி-வேலன்', 'மாறன்-ஆதித்தன்', 'தென்னவன்-தமிழ்வேள்' ஆகியவைபடைத்தளபதிகளின் பட்டங்களாகும்.

62. பாண்டியநாடு' பல **மண்டலங்களாகப்**பிரிக்கப்பட்டிருந்தன.

63. மண்டலங்கள் **வளநாடுகள்**' என அழைக்கப்பட்டன.

PUMS, PONNAMMALPATTI

Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

64. வளநாடுகள் பல 'நாடுகளாகவும்', 'கூற்றங்களாகவும்' பிரிக்கப்பட்டன. 65. நாடுகளை நிர்வகித்தவர்கள் 'நாட்டார்' ஆவர்.

66. திருநெல்வேலி மாவட்டம் மானூர்என்னும் ஊரில் உள்ள கல்வெட்டு கிராமநிர்வாகம் தொடர்பான செய்திகளைக் கொண்டுள்ளது.

67. பாண்டிய அரசர்கள் வேதநடைமுறைகளுக்கு ஆதரவு நல்கினர்

68. பாண்டிய மன்னர்கள் சைவம், வைணவம் ஆகிய இரண்டையும் சமமாகவேகருதினர்

69. குதிரைவணிகத்தில ஈடுபட்டவர்கள் 'குதிரைச் செட்டிகள்' என அழைக்கப்பட்டனர்.

70. நாணயங்கள் காசு, கழஞ்சு, பொன் எனப் பலவாறு அழைக்கப்பட்டன.

71. உத்திரமேரூர் பொறிப்புகள் கிராம நிர்வாகம் குறித்தவிவரங்களை வழங்குகின்றன.

71. பாண்டியர்காலத்துக் கடல்சார்வணிகம் மார்க்கோபோலோ, வாசப்ஆகியோரால் புகழப்பட்டுள்ளது.

## 4. டெல்லி சுல்தானியம்

1. இந்தியாவில் முஸ்லீம்களின்ஆட்சி முகமது கோரியால் கி.பி. 12 ஆம்நூற்றாண்டில் நிறுவப்பட்டது.

2. பன்டகன் - -- இராணுவப் பணிக்காக விலைக்கு வாங்கப்பட்ட அடிமைகளைக் குறிக்கும் பாரசீகச் சொல்)

3. குத்புதீன்ஐபக் இந்தியாவிலிருந்த துருக்கியப் பகுதிகளுக்கு அரசராக தன்னை அறிவித்துக் கொண்டார்.

4. அடிமைவம்சத்தின் ஆட்சிக்கானஅடிக்கல்லை அவர் நாட்டினார். இவ்வரசமரபு "மம்லுக்" அரச மரபென்றும்அழைக்கப்பட்டது. 5. மம்லுக் எனும்அராபியவார்த்தைக்கு 'அடிமை' என்று பொருள்.

6. குத்புதீன் லாகூரைத் தலைநகராகக் கொண்டு தனது ஆட்சியைத் தொடங்கினார். பின்னர்தனது தலைநகரைடெல்லிக்கு மாற்றினார்

7. குத்புதீன்ஐபக் டெல்லியில் குவ்வத்-உல்- இஸ்லாம்மஸ்ஜித் எனும் மசூதியைக் கட்டினார். இந்தியாவிலுள்ள மிகப் பழமையான மசூதி எனக் கருதப்படுகிறது.

8. குதுப்மினாருக்கு குத்புதீன்ஐபக் அடிக்கல் நாட்டினார்.

9. இல்துமிஷ் குதுப்மினாரைக்கட்டி முடித்தார்.

10. போலோ விளையாட்டின் போது குதிரையிலிருந்து தவறி விழுந்ததில் 1210 இல் குத்புதீன்ஐபக் இயற்கைஎய்தினார்.

11. இல்துமிஷ் நாற்பதுபேரைக் கொண்டஒரு குழுவை உருவாக்கினார். அக்குழு "சகல்கானி" அல்லது நாற்பதின்மர் எனஅறியப்பட்டது.

12. இல்துமிஷ் தனது படைகளில் பணியாற்றியோர்க்கு 'இக்தாக்களை' (நிலங்கள்) வழங்கினார்.

13. "இக்தா" என்பது ராணுவ அதிகாரிகளுக்கு வழங்கப்படவேண்டிய ஊதியத்திற்காகக் கொடுக்கப்பட்ட நிலமாகும். 14. நிலத்தைப் பெற்றவர் இக்தாதார் அல்லது முக்தி என்றழைக்கப்பட்டார்

15. கியாசுதீன்பால்பன். "நாற்பதின்மர்" என்றறியப்பட்ட துருக்கியப் பிரபுக்கள் குழு அவரோடு பகைமை பாராட்டியதால் அவ்வமைப்பைப் பால்பன் ஒழித்தார்.

16. பாரசீக கவிஞரானஅமிர்குஸ்ரு என்பாரைப் பால்பன்ஆதரித்தார்.

17.அலாவுதீன் கில்ஜியின் தலைமைத் தளபதி மாலிக் கபூர்.

Padasalai.Net PUMS, PONNAMMALPATTI

P.RATHINASAMY, BT SCIENCE, PUMS, PONNAMMALPATTI, THENI DT.

18. "**ஜவ்ஹர்**" --- ஆடவர்கோட்டையை விட்டு வெளியேறிப் போர்க்களத்தில் மாள்வர். பெண்கள் தீப்புகுந்து தங்களை மாய்த்துக் கொள்வர்

19. **கியாசுதீன்துக்ளக்** என்பவர் **துக்ளக்** அரசவம்ச ஆட்சிக்கு அடிக்கல் நாட்டினார்..

20. **ஜானாகான் முகமதுபின்துக்ளக்** எனும்பெயரோடு 1325இல் அரியணைஏறினார்.

21. கியாசுதீன்துக்ளக் டெல்லிக்கு அருகே **துக்ளகாபாத்** எனும் புதிய நகரை நிர்மாணம் செய்ய அடிக்கல் நாட்டினார்

22. முகமது பின் துக்ளக் தனது தலைநகரை **டெல்லி**யிலிருந்து நாட்டின் மையப்பகுதி யிலிருந்த **தேவகிரிக்கு** மாற்றினார்.

23. முகமதுபின்துக்ளக் தேவகிரியின்பெயரை **தௌலதாபாத்** எனமாற்றினார்.

24. தனது திட்டம்தவறானது என**முகமது பின்துக்ளக்** உணர்ந்ததால் மீண்டும் டெல்லிக்கே திரும்புமாறு அனைவருக்கும்ஆணையிட்டார்

25. மொராக்கோ நாட்டுப் பயணியான **இபன்பதூதா** டெல்லியை அடைந்தபோது அது, "காலியாக, கைவிடப்பட்டதாக ஆனால் குறைந்தளவு மக்களுடன்இருந்தது" எனக் குறிப்பிட்டுள்ளார்.

26. **பகலூல் லோடி .** லோடி வம்ச ஆட்சியைத் தோற்றுவித்தார்.

27. **சிக்கந்தர்லோடி** ஆக்ரா நகரை நிர்மாணித்த அவர் அந்நகரைத் தலைநகர் ஆக்கினார்.

28. இப்ராகிம்லோடி பாபரால் **1526இல் பானிபட்** போர்க்களத்தில் தோற்கடிக்கப்பட்டார்.

29. **பாபர்** முகலாயப் பேரரசை நிறுவினார்.

30. **மதரசாக்கள்** -- கல்வி நிலையங்கள்

## 5. *விஜயநகர், பாமினி அரசுகள்*

*1. **வெற்றியின் நகரம்** என்றறியப்படும் விஜயநகர ம் **ஹரிஹரர், புக்கர்** ஆகிய இரு சகோதரர்களால் கர்நாடகத்தின் தென்பகுதியில் நிறுவப்பட்டது.*

*2. இவர்களது ஆன்மீக குரு **சிருங்கேரி** சைவ மடத்தின் தலைவரான **வித்யாரண்யர்***

*3. விஜயநகர அரசானது **சங்கம** (1336-1485), **சாளுவ** (1485-1505) **துளுவ** (1505-1570), **ஆரவீடு** (1570 -1646) என்ற நான்கு அரச மரபுகளால் ஆளப்பட்டது.*

*4. விஜயநகரப் பேரரசின் திறமை மிக்க படை த்தளபதி **சாளுவ நரசிம்மர்***

*5. சங்கம வம்சத்தின் கடைசி அரசர் இரண்டாம் **விருபாக்சி** ஆவார்.*

*6. துளுவ வம்ச அரசர்களுள் மிகவும் போற்றுதலுக்கு உரியவர் **கிருஷ்ணதேவராயர்** ஆவார்.*

*7. இவர் தமது தலைநகரான **ஹம்பியில் கிருஷ்ணசாமி** கோவில், **ஹசாரா ராமசாமி** கோவில், **விட்டலா சுவாமி** கோவில் போன்ற புகழ்பெற்ற கோவில்களைக் கட்டினார்.*

*8. அரேபியாவிலிருந்தும், ஈரானிலிருந்தும் பெரும் எண்ணிக்கையில் **குதிரைகளை** அவர் இறக்குமதி செய்தார்.*

*9. கிருஷ்ணதேவராயர் **கலை** , **இலக்கியத்தை** ஆதரித்தார்.*

*10. **அஷ்டதிக்கஜங்கள்** என்றறியப்பட்ட எட்டு இலக்கிய மேதைகள் அவரின் அவையை அலங்கரித்தனர்.*

*11. அஷ்டதிக்கஜங்களுள் மகத்தானவர் **அல்லசானி பெத்தண்ணா** ஆவார்.*

*12. அஷ்டதிக்கஜங்களுள் மற்றொரு குறிப்பிடத்தகுந்த ஆளுமை **தெனாலி ராமன்** ஆவார்.*

*13. 1565 -- **தலைக்கோட்டைப் போரில்** விஜயநகரம் தோற்கடிக்கப்பட்டது.*

*14. கிழக்குக் கர்நாடகத்தில், துங்கபத்ரா நதியின் கரையில் உள்ள விஜயநகரம் இருந்த இடம் தற்போது '**ஹம்பி** என அழைக்கப்படுகிறது.*

PUMS, PONNAMMALPATTI
Padasalai.Net

15. **யுனெஸ்கோ** ஹம்பியை பாரம்பரியச் சின்னமாக அறிவித்துள்ளது. 16.
திருமலைதேவராயர் **ஆரவீடு வம்சத் தின்** ஆட்சியைத் தொடங்கினார்.
17. ஆரவீடு வம்சத்தாரின் தலை நகர் **பெனுகொண்டா**
18. அரசபதவி **பரம்பரையானதாக** இருந்தது
19. பேரரசு பல்வேறு **மண்டலங்கள்** (மாநிலம்), **நாடுகள்** (மாவட்டங்கள்),**ஸ்தலங்கள்** (வட்டங்கள்), **கிராமங்கள்** என பிரிக்கப்பட்டிருந்தது.
20. ஒவ்வொரு மண்டலமும் **மண்டலேஸ்வரா** என்ற ஆளுநரின் கீழிருந்தது.
21. கிராமமே நிர்வாகத்தின் மிகச்சிறிய **அலகாக** இருந்தது.
22. ஒவ்வொரு கிராமத்திலும் **கிராமசபை** என்ற அமைப்பிருந்தது. 23.
கிராமம் தொடர்பான விடயங்களைக் **கௌடா** என்றழைக்கப்பட்ட கிரா மத்தலைவர் நிர்வகித்தார்.
24. பேரரசின் இராணுவம் **காலாட்படை** , **குதிரைப்படை** , **யானைப்படை** ஆகிய பிரிவுகளைக் கொண்டிருந்தது.
25. விஜயநகரப் பேரரசர்கள் **வராகன்** என்னும் பெயரில் அதிக எண்ணிக்கை யிலான தங்க நாணயங்களை வெளியிட்டனர். 26.
**கில்டுகள்** என்றழைக்கப்படும் தொழில்சார் அமைப்புகள் கைவினை,குடிசைத் தொழில்களை முறைப்படுத்தின.
27. **கை வினைஞர்களுக்கும் வர்த்தகர்களுக்கும்** தனித்தனியே கில்டுகள் இருந்ததாக பாரசீகப் பயணியான அப்துர்ர ஸாக் குறிப்பிட்டுள்ளார் 28.
கிருஷ்ணதேவராயர் **அமுக்தமால்யதா** என்னும் காவியத்தைத் **தெலுங்கு** மொழியில் இயற்றினார்.
29. கிருஷ்ணதேவராயர் சமஸ்கிருத மொழியில் **ஜாம்பவ தி கல்யாண** ம் என்னும் நாடக நூலையும் எழுதினார்.
30. **பாண்டுரங்கமகாத்தியம்** என்னும் நூலைத் **தெனாலி ராமகிருஷ்ணா** எழுதினார்.
31. **ஸ்ரீநாதர்**, **பெத்தண்ணா** , **ஜக்கம்மா** , **துக்கண்ணா** போன்ற புலவர்கள் சமஸ்கிருத, பிராகிருத மொழிகளில் எழுதப்பட்ட நூல்களைத் தெலுங்கு மொழியில் மொழியாக்கம் செய்தனர்
32. **அமுக்தமால்யதா**' தெலுங்கு இலக்கியத்தின் தலை சிறந்த படை ப்பாகக் கருதப்படுகிறது
33. அமுக்தமால்யதா என்பதற்கு **தான் அணிந்த பின்னர் கொடுப்பவர்** எனப் பொருள்.
34. அமுக்தமால்யதா பெரியாழ்வாரின் மகளான **கோதை தேவியைப்** பற்றியதாகும்.
35. விஜயநகர அரசர்களின் கோவில் கட்டுமான நடவடிக்கைகள் **விஜயநகரப்பாணி** என அழைக்கப்பட்டது.

**பாமினி அரசு**

36. 1347இல் அலா வுதீன் ஹசன் (**ஹசன் கங்கு**) **பாமன்ஷா** என்ற பெயரில் தம்மையே சுல்தானாக அறிவித்துக் கொண்டார் 37. பாமன்ஷா
தமது அரசை **நான்கு மாகாணங்களாகப்** பிரித்தார். அவை **தராப்** என அழைக்கப்பட்டன .
38. **கோல்கொண்டா கோட்டையானது** ( ஹைதராபாத் திலிருந்து 11 கி.மீ ) **ஒலி** தொடர்பான கட்ட டக்கலை அம்சங்களுக்கு பெயர் பெற்றதாகும்.
39. **முதலாம் முகமது ஷா**, பாமினி அரசிற்கு வலுவான ஓர் அடித்தளத்தை அமைத்துக் கொடுத்தார்

**40. பாமினி அரசின் எட்டு அமைச்சர்கள் :**

1. **வக்கீல்** – உஸ் – சல்தானா அல்லது அரசின் **பிரதம** அல்லது முதலமைச்சர் அரசருக்கு அடுத்த நிலையில் துணையதிகாரியாகச் செயல்பட்டவர்.
2. **பேஷ்வா** நாட்டின் பிரதம மந்திரியோடு இணைந்து செயல்பட்டவர்.

PUMS, PONNAMMALPATTI

P.RATHINASAMY, BT SCIENCE, PUMS, PONNAMMALPATTI, THENI DT.

3. **வஸிரி** – குல் ஏனைய அமைச்சர்களின் பணிகளை மேற்பார்வையிட்டவர்.
4. **அமிர்** - இ - ஜும்லா நிதியமைச்சர்
5. **நஷீர்** - உதவி நிதியமைச்சர்
6. **வஷிர்** - இ - அசாரப் - வெளியுறவுத்துறை அமைச்சர்
7. **கொத்தவால்** - காவல்துறைத் தலைவர் மற்றும் நகர குற்றவியல் நடுவர்
8. **சதார்-இ - ஜகான்** - தலைமை நீதிபதி, சமயம் மற்றும் அறக்கொடைகளின்அமைச்சர்

41. சுல்தானியம் ( **பாமினி** ) படிப்படியாக **ஐந்து** சுதந்திரமான தக்காண சுல்தானியங்களாகச் சிதைந்தது. அவை **பீடார்**, **பீஜப்பூர்**, **அகமதுநகர்**, **பீரார்**, **கோல்கொண்டா** ஆகியனவாகும்.
42. பீடாரில் அமைந்துள்ள உலகப் புகழ்பெற்ற மகமது கவானின் **மதரசா** (கல்வி நிலையம்) **3000** கையெழுத்துப் பிரதிகளைக் கொண்ட **பெரிய நூலகத்தைக்** கொண்டிருந்தது

## 6. முகலாயப் பேரரசு

1. ஷெர்ஷா **சூர்** வம்சத்தைச் சேர்ந்தவர்
2. இந்தியாவில் முகலாயப் பேரரசை நிறுவியவர் **ஜாகிருதீன் முகமது பாபர்** ஆவார்
3. பாபர். **1483 பிப்ரவரி 14** இல் பிறந்தார். அவருக்கு **ஜாகிருதீன்** (நம்பிக்கையைக் காப்பவர்) முகமது எனப் பெயரிடப்பட்டது
4. **1526** இல் நடைபெற்ற **முதலாம் பானிப்பட்** போரில் பாபர் இப்ராகிம் லோடியைத் தோற்கடித்து டெல்லியையும் ஆக்ராவையும் கைப்பற்றினார்.
5. முகலாய வம்சத்தின் ஆட்சி **ஆக்ராவைத்** தலைநகராகக் கொண்டு துவங்கியது
6. பாபர் **1527** இல் ராணா சங்காவை **கன்வா** என்னுமிடத்தில் தோற்கடித்தார்.
7. **1528** இல் **சந்தேரித்** தலைவருக்கு எதிரான போரில் வெற்றி கொண்டார்
8. பாபர் **1529 இல்** வங்காளம், பீகார் ஆகியவற்றைச் சேர்ந்த ஆப்கானியத் தலைவர்களை வெற்றி கொண்டார்.
9. பாபர் துருக்கிய, பாரசீக மொழிகளில் **துசுக்-இ-பாபரி** என்ற தம் சுயசரிதையை பதிவு செய்துள்ளார்.
10. பாபர் தன் மூத்த மகன் **ஹுமாயுனைத்** தம் வாரிசாக அறிவித்தார்.
11. ஷெர்ஷா **1539** இல் **செளசா** என்ற இடத்திலும், **1540 இல் கன்னோஜிலும்** ஹுமாயூனைத் தோற்கடித்தார்.
12. ஷெர்ஷா ஆக்ராவில் **சூர்** வம்சத்தின் ஆட்சியைத் தொடங்கி வைத்தார்.
13. **1556** இல் ஹுமாயூன் இயற்கை எய்திய பின்னர், அவருடைய பதினான்கு வயது மகன் **அக்பர்** அரசராக முடிசூட்டப் பெற்றார்
14. அக்பர் சிறுவனாக இருந்ததால், **பைராம்கான்** பகர ஆளுநர் பொறுப்பேற்று அக்பர் சார்பாக ஆட்சி புரிந்தார்
15. **1556** பைராம்கான் பானிப்பட் போர்க்களத்தில் (இரண்டாம் பானிப்பட் போர்) **ஹெமு**வைத் தோற்கடித்துக் கொன்றார்.
16. மத்திய இந்தியப் பகுதியைச் சேர்ந்த **ராணி துர்க்காவதியை** பாபர் தோற்கடித்தார்.
17. அகமதுநகர் அரசின் ராணி **சந்த் பீவியின்** மீது அக்பர் படையெடுத்தார்.
18. **1576** இல் உதய் சிங்கின் மகனான **ராணா பிரதாப்பை** ஹால்டிகாட் போரில் வெற்றி கொண்டார்.
19. **1605** இல் அக்பர் இயற்கை எய்தினார். அவருடைய உடல் ஆக்ராவுக்கு அருகே **சிக்கந்தராவில்** நல்லடக்கம் செய்யப்பட்டது.
20. முஸ்லிம்கள் அல்லாதோர் மீது விதிக்கப்பட்டிருந்த **ஜிசியா** வரியையும், இந்துப் பயணிகளின்

PUMS, PONNAMMALPATTI

மீது விதிக்கப்பட்டிருந்த வரிகளையும் நீக்கினார்.

21. சூபி துறவியான **சலீம் சிஸ்டியும்**, சீக்கிய குருவான **ராம்தாசும்** அக்பரின் அளவில்லா மதிப்பையும்மரியாதையை யும் பெற்றிருந்தனர்.

22. **அபுல்பாசல்**, **அப்துல் பெய்சி**, **அப்துர் ரகீம் கான்**-இ-கான் ஆகிய நூலாசிரியர்கள் சிறந்த கதை ஆசிரியரான **பீர்பால்**, திறமையான அதிகாரிகளான **ராஜா தோடர்மால்**, **ராஜா பகவன்தாஸ்** , **ராஜா மான்சிங்** ஆகியோர் அக்பரின் அவையில் இடம்பெற்றிருந்தனர்.

23. பாடலாசிரியரும் இசை மேதையுமான **தான்சென்** ஓவியர் தஷ்வந் ஆகியோர் அக்பரின் அவையை அலங்கரித்தனர்.

24. அக்பருக்குப் பின்னர் , அவருடைய ரஜபுத்திர மனைவிக்குப் பிறந்த இளவரசர் **சலீம் நூருதீன் முகமது ஜஹாங்கீர்** (உலகத்தைக் கைப்பற்றியவர்) என்ற பெயரில் மகுடம் சூடினார்.

25. ஜஹாங்கீரின் மனைவி **நூர்ஜகான்** என அறியப்பட்ட **மெகருன்னிசா** உண்மையான அதிகாரத்தைப் பெற்றவராகத் திகழ்ந்தார்

26. தமது மகன் **குஷ்ருவுக்கு** உதவினார் என்பதற்காகச் சீக்கியத் தலைவர் **குரு அர்ஜூன்** சிங்கைத் தூக்கிலிடும்படி ஜஹாங்கீர் உத்தரவிட்டார் .

27. இங்கிலாந்து அரசர் முதலாம் **ஜேம்ஸின் பி**ரதிநிதியான **தாமஸ்ரோ** ஜஹாங்கீரின் அரசவைக்கு வருகை புரிந்தார் .

28.ஜஹாங்கீரின் அனுமதி பெற்று தாமஸ்ரோ தங்கள் முதல் வணிக மையத்தை **சூரத்தில்** நிறுவினார்.

29. ஜஹாங்கீரைத் தொடர் ந்து, இளவரசர் குர்ரம் **ஷாஜகான் (உலகத்தின் அரசர்**) என்ற பெயருடன் அரசராக ஆட்சிப் பொறுப்பெற்றார் .

30. சிவாஜியின் தந்தை **ஷாஜி பான்ஸ்லே** ஆவார்.

31. 1657 இல் ஷாஜகான் நோய்வாய்ப்பட்டதைத் தொடர் ந்து அவருடைய நான்கு மைந்தர் களுக்குள் **வாரிசு உரிமைப்போர்** வெடித்தது.

32. தம்முடைய மூன்று சகோதரர்களான **தாரா**, **சூஜா, முராத்** ஆகியோரைக் கொன்று ஔரங்கசீப் வெற்றிபெற்றார் .

33. தம் வாழ்நாளின் இறுதி **எட்டு** ஆண்டுகளை **ஷாஜகான்** ஒரு கைதியாக ஆக்ரா கோட்டையிலுள்ள **ஷாபர்ஜ்** அரண்மனையில் கழித்தார் .

34. முகலாய மாமன்னர்களில் கடைசி அரசர் **ஔரங்கசீப்**

35. ஔரங்கசீப் **ஆலம்கிர் (உலகைக் கைப்ப ற்றியவர்)** என்னும் பட்டத்தை சூட்டிக் கொண்டார் .

36. இந்துக்களின் மீது மீண்டும் **ஜிசியா வரியை** விதித்தார் .

37. **சிவாஜி**, 1674 இல் தம்மை மராத்திய நாட்டின் பேரரசராக அறிவித்தார் .

38. ஔரங்கசீப்பின் ஆட்சியின் இறுதிக் கட்டத்தில் ஆங்கிலேயர்கள் **மதராஸ்** (சென்னை ), **கல்கத்தா** (கொல்கத்தா ),**பம்பாய்** (மும்பை ) ஆகிய இடங்களில் தங்கள் வணிக மையங்களை வலுவாக நிறுவினர்.

39. பிரெஞ்சுக்காரர்கள் தங்களின் முதன்மை வணிக மையத்தைப் **பாண்டிச்சேரியில்** நிறுவினர்

39. பேரரசரே முகலாய நிர்வாகக் கட்டமைப்பின் **உச்ச உயர்நிலைத் தலைவர்**ஆவார்.

40. **சட்டங்களை** இயற்றுபவரும் ; அவற்றைச் **செயல்படுத்துபவரும்** படைகளின் **தலைமைத்தளபதி, நீதி** வழங்குபவரும் பேரரசரே ஆவார்.

41. அமைச்சர் குழு **வக்கீல்** (பிரதம மந்திரி) **வஜீர் அல்லது திவான்** (வருவாய்த் துறை மற்றும் செலவுகள்) **மீர்பாக்ஷி** இராணுவத்துறை அமைச்சராவார்.

42. **மீர்சமான்** அரண்மனை நிர்வாகத்தை கவனித்தார் .

43. **குவாஜி** தலைமை நீதிபதியாவார்.

44. **சதா-உஸ்- சுதூர்** இஸ்லாமியச் சட்டங்களை (சாரியா) நடைமுறைப்படுத்தினார்.

Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

45. பேரரசு பல **சுபா**க்களாகப் (மாகாணங்கள் மாநிலங்கள்) பிரிக்கப்பட்டிருந்தன.
46. ஒவ்வொரு சுபாவும் '**சுபேதார்** என்னும் அதிகாரியின் கட்டுப்பாட்டில் இருந்தது.
47. ஒவ்வொரு சுபாவும் பல **சர்க்கார்களாகப்** (மாவட்டங்கள்) பிரிக்கப்பட்டிருந்தன.
48. சர்க்கார் **பர்கானாக்களாகப்** பிரிக்கப்பட்டிருந்தன.
49. பல **கிராமங்களை** உள்ளடக்கிய பிரிவே பர்கானாவாகும்.
50. நகரங்களும் பெருநகரங்களும் **கொத்தவால்** எனும் அதிகாரிகளால்நிர்வகிக்கப்பட்டன.
51. கொத்தவால் **சட்டம் ஒழுங்கைப்** பராமரித்தார் 52.
முகலாய இராணுவமானது **காலாட்படை** , **குதிரைப்படை** , **யானைப்படை** , **பீரங்கிப்படை** ஆகிய பிரிவுகளைக் கொண்டிருந்தன 53.
**மன்சப்தாரி முறையை** அக்பர் அறிமுகம் செய்தார் .
54. **மன்சப்** -- படிநிலை , தகுதி அந்தஸ்து
55. மன்சப்தார் **சாட்**, **சவார்** எனும் இரு விடயங்களைச் சார்ந்திருந்தன.
56. **சாட்**, என்பது அவரது தகுதியைக் குறிப்பதாகும்.
57. **சவார்** என்பது ஒரு மன்சப்தார் பராமரிக்க வேண்டிய குதிரைகள், குதிரை வீரர்களின் எண்ணிக்கையைக் குறிப்பதாகும்.
58. அக்பரின் வருவாய்த்துறை அமைச்சரான **ராஜா தோடர்மால்** ஷெர்ஷா அறிமுகம் செய்த முறையைப் பின்பற்றினார் 59.
முகலாயப் பேரரசர்கள் பழைய **இக்தா** முறையை **ஜாகீர்** எனப் புதிய பெயரிட்டுச் செயல்படுத்தினர். 60.
குறிப்பிட்ட ஒரு பகுதியில் நிலவரி வசூல் செய்யும்பொறுப்பும் அப்பகுதியை நிர்வகிக்கும் பொறுப்பும் **ஜாகீர்தாரிடம்** ஒப்படைக்கப்பட்டது. 61.
தங்களது ஊதியத்தைப் பணமாகப் பெறாத ஒவ்வொரு மன்சப்தாரும் **ஜாகீர்தார்** ஆவார்.
62. ஜாகீர்தார் தம் அதிகாரிகள் மூலம் **நிலவரியை** வசூல் செய்தார் .
63. மாவட்ட அளவிலான வரிவசூல் அதிகாரி **அமில் குஜார்** ஆவார். 64.
குஜாருக்குப் **பொட்டாதார்**, **கனுங்கோ**, **பட்வாரி**, **முக்காதம்** போன்ற துணை நிலை அதிகாரிகள் உதவி செய்தனர் 65. நில
உரிமையாளர்களிடமிருந்து நிலவரியை வசூலிக்கப் பணியமர்த்தப்பட்டவர்களே **ஜமீன்தார்கள்** ஆவர். 67.
அறிஞர்களுக்கும், இறைப்பணியில் ஈடுபட்டுள்ள பெரியோர்க்கும், சமயம் சார்ந்த நிறுவனங்களுக்கும் அரசர் **நிலங்களை** வழங்கினார்.
68. வரிவிலக்கு அளிக்கப்பட்ட இந்நிலங்கள் **சுயயூர்கள்** என்றழைக்கப்பட்டன.
முகலாயப் பேரரசர்கள் இஸ்லாமைப் பின்பற்றினர். 69.
அக்பர் அனைத்து மதங்களிலுமுள்ள சிறந்த கொள்கைகளை ஒருங்கிணைத்துத் **தீன்-இலாகி (தெய்வீக மதம்)** என்னும் ஒரே சமயத்தை உருவாக்க முயன்றார் .
70. பாபர் , **பாரசீகக் கட்டட** முறையை இந்தியாவில் அறிமுகப்படுத்தினார்
71. **திவான் -இ-காஸ்**, திவான்-இ- ஆம், பஞ்ச் மஹால் (பிரமிடு வடிவிலான ஐந்து அடுக்குக் கட்டடம்) ரங் மஹால், சலீம் சிஸ்டியின் கல்லறை , புலந்தர்வாசா ஆகியவை அக்பரால் கட்டப்பட்டவையாகும்
72. பேரரசர் அமர்வதற்காக விலையுயர்ந்த நவரத்தினக் கற்கள் பதிக்கப்பெற்ற **மயிலாசனம்** ஷாஜகானால் தயாரிக்கப்பட்டது.
73. யமுனை நதிக்கரையில் உலகப் புகழ்பெற்ற **தாஜ்மஹால்** ஷாஜகானால் எழுப்பப்பட்டது.

**P.RATHINASAMY, BT SCIENCE, PUMS, PONNAMMALPATTI, THENI DT.**

74. ஆக்ராவிலுள்ள **முத்து மசூதி** (மோதி மசூதி) டெல்லியிலுள்ள மிகப்பெரிய **ஜூம்மா மசூதி** ஆகியவை ஷாஜகானால் கட்டப்பட்டவையாகும். 75.
**லால் குய்லா** என்று அழைக்கப்படும் டெல்லியிலுள்ள '**செங்கோட்டை** '1639 இல் பேரரசர் ஷாஜகானால் கட்டப்பட்டது ., 76.
செங்கோட்டை **சிவப்புநிறக்** கற்களால் கட்டப்பட் டுள்ளதால் இது செங்கோட்டை என அழைக்கப்படுகிறது.

## 7. மராத்தியர்கள் மற்றும்பேஷ்வாக்களின் எழுச்சி

1. சிவாஜி **கொரில்லாப் போர்** முறைகளுக்கு (மறை ந்திருந்து தாக்குதல்) தலைவராக இருந்தார்.
2. பக்தி இயக்கத்தைச் சேர்ந்த பெ ரியோர்களில் **ஏக்நாத்**, **துக்காராம்**, **ராம்தாஸ்** ஆகியோர் குறிப்பிடத்தக்கோர் ஆவர்.
3. 1627 இல் பிறந்த சிவாஜி, தன் தாயார் **ஜீஜாபாயின்** பாதுகாப்பில் வளர்ந்தார்.
4. சிவாஜியின் ஆசிரியரும் குருவுமான **தாதாஜி கொண்டதேவ்** குதிரையேற்றம், போர்க்கலை , அரசு நிர்வாகம் ஆகியவற்றில் சிவாஜிக்குப் பயிற்சியளித்தார்.
5. சிவாஜியின் பாதுகாவலர் **தாதாஜி கொண்டதேவ்**
6. 1659இல் பீஜப்பூரின் தளபதியான **அப்சல்கானைக்** கொன்றார். 7.
1663இல் ஔரங்கசீப்பின் முகலாயத் தளபதி **ஷெஸ்டகானை** சிவாஜி காயப்படுத்தித் துரத்தியடித்தார்.
8. சிவாஜியை அழித்தொழிக்க **ராஜா ஜெய் சிங்** எனும் ராஜபுத்திரத் தளபதியின் தலைமையின் கீழ் முகலாயப் படையொன்று அனுப்பிவைக்கப்பட்டது.
9. **சத்ர** (குடை ) **பதி** (தலைவன் அல்லது பிரபு) எனும் **சமஸ்கிருதச்** சொல் அரசன் அல்லது பேரரசன் என்பதற்கு இணையானது
10. 1674இல் சிவாஜி **சத்ரபதி** என்னும் பட்டத்துடன் ரெய்கார் கோட்டையில் மணிமுடி சூடிக் கொண்டார்.
11. மக்கள் **சௌத்** (மொத்த வருமானத்தில் நான்கில் ஒரு பங் கு (1/4),பாதுகாப்புக் கட்டணமாக) **சர்தேஷ் முகி** (பத்தில் ஒரு பங்கு (1/10) அரசருக்கா ன கட்டணமாக) ஆகிய வரிகளைச் செலுத்த வேண்டும். 12. கிராமங்கள்
**தேஷ் முக்** என்பவர்களால் நிர்வகிக்கப்பட்டது. 13. ஒவ்வொரு
கிராமத்திலும் ஒரு **கிராமத் தலைவர் (பட் டீல்)** இருந்தார்.
14. அவருக்கு உதவியாக ஒரு கணக்கரும் **குல்கர்னி** என்ற பெயரில் ஆவணக் காப்பாளர் ஒருவரும் பணியாற்றினர்.
15. சிவாஜி எட்டு அமைச்சர்களைக் கொண்ட குழுவிற்கு **அஷ்டபிரதான்** எனப் பெயரிட்டார்.

**அஷ்டபிரதா னின் பொறுப்புகள்**

| | |
|---|---|
| 16. **பந்த்பீரதான்। பேஷ்வா** | பிரதம அமைச்சர் |
| 17. **அமத்தியா। மஜீம்தா ர்** | நிதியமைச்சர் |
| 18. **சுர்நாவிஸ்। சச்சீவ்** | செயலர் |
| 19. **வாக்கிய-நாவிஸ்** | உள்துறை அமைச்சர் |
| 20. **சர்-இ –நௌபத்।சேனாபதி** | தலைமை த் தளபதி |
| 21. **சுமந்த்। துபிர்** | வெளியுறவுத்துறைஅமைச்சர் |
| 22. **நியாயதிஸ்** | தலைமை நீதிபதி |

P.RATHINASAMY, BT SCIENCE, PUMS, PONNAMMALPATTI, THENI DT.

| | |
|---|---|
| 23. பண் டிட்ராவ் | தலைமை அர்ச்சகர் |

24. சிவாஜிக்குப் பின்னர், அவருடைய பேரன் ஷாகு 1708 முதல் 1749 வரை ஆட்சி புரிந்தார்.
25. ஷாகு என்றால் நேர்மையானவர் என்று பொருள்.

**முக்கிய மராத்தியக் குடும்பங்கள்**

26. • கெய்க்வாட் – பரோடா
27.• பான்ஸ்லே – நாக்பூர்
28 • ஹோல்கார் – இந்தூர்
29. • சிந்தி அல்லது சிந்தியா – குவாலியர்
30. • பேஷ்வா – புனே
31. பேஷ்வாக்களின் வருவாய்த்துறை நிர்வாகம் காமவிஸ்தார் என்னும் முக்கிய அதிகாரிகளைக் கொண்டிருந்தது
32. 1761--- மூன்றாம் பானிப்பட் போர்

## 8. புதிய சமயக் கருத்துக்களும் இயக்கங்களும்

1. பக்தி இயக்கம் புத்தெழுச்சி தமிழகத்தில் கி.பி. ஏழாம் நூற்றாண்டை ஒட்டித் தொடங்கிற்று
2. தியானங்களே ஒரு பக்தனுக்குக் கடவுளின் உண்மையான இயல்பைப் புரிந்துகொள்ள உதவுமென சூபிக்கள் நம்பினர்.
“3. இந்துக்களும் இஸ்லாமியரும் கடவுளை வெவ்வேறு பெயர்களில் அழைத்தாலும் இருப்பது ஒரேயொரு கடவுள் மட்டுமே” என ஹரிதாசர் கூறியுள்ளார்.
4. பக்தி இயக்கத்தைத் தொடங்கி வைத்த வைணவ பக்தி அடியார்கள்ஆழ்வார்கள் ஆவர்.
5. சிவனை வழிபடும் சைவர்கள் நாயன்மார்கள் ஆவர்.
6. நம்மாழ்வார் அவர் இயற்றிய 1,102 பத்திகளைக் கொண்ட திருவாய்மொழியால் புகழ்பெற்றார்.
7. நம்மாழ்வாரின் 4000 பாடல்களை நாலாயிரம் திவ்வியப் பிரபந்தம் எனும் பெயரில் நாதமுனி தொகுத்துள்ளார்.
8. ஆழ்வார்களில் ஆண்டாள் மட்டுமே பெண்பால் ஆழ்வாராவார்
9. திருப்பாவை (கிருஷ்ணனை அடையும் வழி) நாச்சியார் திருமொழி (பெண்ணின் புனிதப் பாடல்கள்) ஆகிய இரண்டும் ஆண்டாளின் புகழ்பெற்ற கவிதை நூல்களாகும்.
10. வைணவ அடியார்கள் 12 ஆழ்வார்கள்
**11. முதல் மூன்று ஆழ்வார்கள்:** பொய்கை ஆழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார்.
ஏனைய ஆழ்வார்கள்: திருமழிசையாழ்வார், பெரியாழ்வார், தொண்டரடிப்பொடி ஆழ்வார், திருமங்கை ஆழ்வார், திருப்பண் ஆழ்வார், குலசேகர ஆழ்வார், நம்மாழ்வார், மதுரகவி ஆழ்வார், ஆண்டாள்.
12. மரபுவழிக் கதை யின்படி நாயன்மார்கள் 63 பேராவர். அவர்களில் ஞான சம்பந்தர், அப்பர், சுந்தரர் (மும்மூர்த்திகள் என அழைக்கப்படுபவர்கள்) ஆகியோர் தென்னிந்தியக் கோவில்களில் சிலைவழிபாடு செய்யப்படுகின்றனர்.
13. நாயன்மார்களின் பாடல்கள் அனைத்தையும் நம்பி ஆண்டார் நம்பி (கி.பி.1000) தொகுத்தார்
14. சைவப்புனித நூல்கள் திருமுறை ஆகும்
.15. திருமுறை 12 நூல்களைக் கொண்டுள்ளது. அவற்றில் 11 நூல்கள் நம்பி ஆண்டார் நம்பியால் தொகுக்கப்பட்டவையாகும்.
16. சேக்கிழாரின் பெரியபுராணம் 12வது நூலாகும்

PUMS, PONNAMMALPATTI

P.RATHINASAMY, BT SCIENCE, PUMS, PONNAMMALPATTI, THENI DT.

17. ஆதிசங்கரர் அல்லது சங்கராச்சாரியார் **அத்வைதம்** எனும் தத்துவத்தைப் போதித்தவராவார்.

18. ஞானத்தைப் பெறுவதன் வழியாக **ஜீவாத்மா பரமாத்** மாவுடன் ( பிரம்மா) இணையும் என்பதே இத்தத்துவத்தின் சாரமாகும்

19. ஆதிசங்கரர் **பத்ரிநாத், பூரி, துவாரகா, சிருங்கேரி** ஆகிய இடங்களில் மடங்களை நிறுவினார்.

20. ஆதிசங்கரர் **பிரம்ம சூத்திரம்** எனும் நூலுக்கு உரை எழுதினார்

27. **பிரம்ம சூத்திரம்** வேதாந்தப் பள்ளியின் அடிப்படை நூலாகும்.

28. **ராமானுஜர்** வைணவச் சிந்தனையாளர் ஆவார்.

29. ராமானுஜர் முன் வைத்தத் தத்துவம் **விசிஷ்டாத்வைதம்** ஆகும்.

30. **ஆத்மாவானது பிரம்மத்துடன் கலந்த பின்னரும் தனக்கான அடையாளத்தைத் தக்கவைத்துக் கொள்கிறது** என இத்தத்துவம் அறிவித்தது

31. **காஞ்சிபுரத்தில்** வடகலை வைணவம் செழித்தோங்கியது.

32. தென்கலை வைணவம் **திருவரங்கத்தை** மையமாகக் கொண்டிருந்தது.

33. சமஸ் கிருதத்தில் எழுதப்பட்ட **வேத நூல்களே** முக்கியமானவை என வடகலையினர் கருதினர்.

34. தமிழ் மொழியில் **பன்னிரு ஆழ்வார்களால்** எழுதப்பட்ட திவ்விய பிரபந்தத்திற்கு தென்கலையினர் அதிக முக்கியத்துவம் கொடுத்தனர்.

35. வடஇந்தியாவில் பக்திச் சிந்தனையை ஒரு மக்கள் இயக்கமாக மாற்றியவர் **இராமாநந்தர்** ஆவார்.

36. தெலுங்கு தத் துவஞா னியான **வல்லபாச்சாரியார்**, மதுராவுக்கு அருகே **கோவர்தன்** குன்றுகளில் கிருஷ்ணபகவானுக்கு ஒரு கோவிலை அமைத்தார்.

37. கவிஞரும் இசைக்கலைஞரும், பார்வைத் திறன் அற்றவருமான **சூர்தாஸ்ருடைய** கவிதைகளின் தொகுப்பு **சூர்சாகர்** என்றழைக்கப்படுகிறது.

38. மேவார் நாட்டின் பட்டத்து இளவரசரின் மனைவியான **மீராபாய்** கிருஷ்ண பகவானின் தீவிர பக்தையாவார்.

39. மீராபாய் **ரவிதாஸ்** என்பவரின் சீடராவார்.

40. மீராபாய் அவருடைய **பஜன்** (பஜனை) பாடல்கள் மூலம் பிரபலமானார்.

41. **சைதன்ய தேவர்** தனது பரவசமூட்டும் பாடல்கள், களிப்பூட்டும் நடனங்கள் மூலம் கிருஷ்ண வழிபாட்டைப் பிரபலமாக்கினார்.

42. துளசிதாசர் இந்தி மொழியில் எழுதிய **இராமசரிதமானஸ்** எனும் நூல் நட்பு, விசுவாசம் ஆகிய உணர்வுகளுக்கு அதிக அழுத்தம் கொடுத்தது.

43. மகாராஷ்டிராவில் சோலாப்பூர் மாவட்டத்திலுள்ள **பந்தர்பூர்** அல்லது பண்டரிபுரத்தில் **விதோபா /பாண்டுரங்கா கோவில்** உள்ளது

44. சூபி எனும் சொல் ‘**சுப்**’ எனும் சொல்லில் இருந்து தோன்றியதாகும்.

45. சுப் அதன் பொருள் **கம்பளி** ஆகும்.

46. சூபிக்கள் சொரசொரப்பான **முரட்டுக் கம்பளியாலானஉடைகளை** அணிந்ததால் சூபிக்கள் என அழைக்கப்பட்டனர்.

47. **சூபியிஸம்** அடிப்படையில் இஸ்லாமியத்தைச் சேர்ந்ததாக இருந்தாலும் அதன் மீது இந்து, பௌத்த (மகாயான) சமயக் கருத்துக்களின் தாக்கத்தைப் பெற்றிருந்தது.

48. சூபிக்கள் மூன்று முக்கிய அமைப்பினராகப் பிரிக்கப்பட்டிருந்தனர். அவை **சிஸ்டி, சுரவார்டி, பிர்தௌசி** என்பனவாகும்.

49. **மொய்னுதீன் சிஸ்டி**, சிஸ்டி அமைப்பை இந்தியாவில் பிரபலமாக்கினார்.

PUMS, PONNAMMALPATTI

P.RATHINASAMY, BT SCIENCE, PUMS, PONNAMMALPATTI, THENI DT.

50. . சுரவார்டி அமைப்பைத் தோற்றுவித்தவர் ஈரானைச் சேர்ந்த சூபியான அப்துல்-வகித் அபு நஜிப் என்பவராவார்.

51. பிர்தௌசி அமைப்பு சுரவார்டியின் ஒரு கிளைப் பிரிவாகும். அது பீகாரில் மட்டுமே செயல்பட்டது.

அ. கபீர்

52. பல்வேறு சமயப்பிரிவுகள் கடவுளுக்கு வெவ்வேறு பெயர்களையும் வடிவங்களையும் கொடுத்திருந்தாலும் கடவுள் ஒருவரே என்றும், வடிவமற்றவர் என்றும் கபீர் நம்பினார்.

53. சமயம், சாதி, செல்வம் ஆகியவற்றின் அடிப்படையிலான பாகுபாடுகளை அவர் கண்டனம் செய்தார்.

54. பொருளற்ற சடங்கு முறைகளையும் அவர் கண்டனம் செய்தார்.

55. கபீரின் பாடல்கள் போஜ்புரி மொழியோடு உருது மொழி கலந்து எழுதப்பட்டவையாகும்

56. கபீரின் கிரந்தவளி, பைஜக் ஆகிய நூல்கள் அவருடைய கவிதைகளின் தொகுப்புகளாகும்.

**57.** கடவுள் வடிவமற்றவர் என குருநானக் போதித்தார்.

58. குருநானக் சீக்கியர்களின் முதல் குருவாகக் கருதப்படுகிறார்.

59. வேதச்சடங்குகள் சாதிப்பாகுபாடுகள் ஆகியவை மீது அவர் பெரும் வெறுப்புக் கொண்டிருந்தார்.

60. போதனைகள் தொகுக்கப்பட்டு குரு கிரந்சாகிப் என்றழைக்கப்பட்டது.

61. குரு கிரந்சாகிப் சீக்கியர்களின் புனித நூலாகும்.

62. கீர்த்தன் எனப்படும் பாடல்கள் பாடும் இசைக்குழுக்கள் மூலமாக குருநானக்கின் போதனைகள் பரப்புரை செய்யப்பட்டன.

63. இவருடைய பக்தர்கள் தர்மசாலைகள் எனப்படும் ஓய்வு விடுதிகளில் ஒன்று கூடினர். இவைகளே காலப்போக்கில் குருத்வாராக்கள் ஆயின.

64. குருகோவிந்சிங் காலத்தில் பாகல் எனப்படும் திருமுழுக்கு (குறுவாளால் கிளறப்பட்ட இனிப்பான நீரைக் கொடுத்தல்) செய்யும்முறை அறிமுகம் செய்யப்பட்டது.

65. இவ்வாறு திருமுழுக்கு பெற்றவர்கள் கால்சா (தூய்மை) எனப்பட்ட முறைப்படுத்தப்பட்டு ஒழுங்கமைக்கப்பட்ட சகோதரத்துவ அமைப்பின் உறுப்பினராயினர்.

66. இவர்களுக்கு சிங் (சிங்கம்) என்ற பட்டமும் வழங்கப்பட்டது.

67. கால்சாவின் உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் ஐந்து தனித் தன்மைகளைக் கொண்டிருக்க வேண்டும். அவை கேஷ் (வெட்டப்படாத முடி), கன்கா (சிகைக்கோல்), கிர்பான் (குறுவாள்), கடா (இரும்புக் காப்பு), கச்சேரா (உடலின் கீழ்ப்பகுதியில் அணியும் உள்ளாடை) ஆகியனவாகும்.

68. குரு கோவிந்சிங்கிற்குப் பின்னர் புனித நூலான குருகிரந்த் சாகிப் குருவாகக் கருதப்பட்டது. அதன் கருத்துக்களை கால்சா அமைப்பு பரப்பியது.

## 9. தமிழ்நாட்டில் கலையும் கட்டடக் கலையும்

1. தமிழ் திராவிடக் கட்டடக் கலையின் மரபிற்கு மகாபலிபுரத்திலுள்ள குடைவரைக் கோவில்களே (குகைக்கோவில்கள்) எடுத்துக்காட்டுகளாகும்.

2. தமிழ்நாட்டில் கோவில் கட்டடக்கலையின் பரிணாம வளர்ச்சி ஐந்துகட்டங்களாக நடைபெற்றுள்ளது. அவை:

1. பல்லவர் காலம் (கி.பி 600 - 850),
2. முற்காலச் சோழர்கள் காலம் (கி.பி 850- 1100),
3. பிற்காலச் சோழர்கள் காலம் (கி.பி. 1100 -1350),

PUMS, PONNAMMALPATTI
Padasalai.Net

4. **விஜயநகரநாயக்கர் காலம்** (கி.பி.1350-1600),
5. **நவீன காலம்** (கி.பி.1600க்கு பின்ன ர்).

3. குடைவரைக் கட்டடக் கலைக்கு முன்னோடியாகத் திகழ்ந்தவர் பல்லவ அரசர் **மகேந்திரவர்மன்** ஆவார்.

4. **மண்டகப்பட்டிலுள்**ள குடைவரைக் கோவிலே அவர் உருவாக்கிய முதல் குடைவரைக் கோவிலாகும்

5. **ஏழு கோவில்கள்** எனவும் அழைக்கப்படும், மகாபலிபுரத்தில் அமைந்துள்ள **கடற்கரைக் கோவில்கள்** பல்லவ அரசர் **இரண்டாம் நரசிம்மவர்மனால்** எழுப்பப்பட்டவைஆகும்

6. பல்லவ மன்னன் இரண்டாம் நரசிம்மவர்மன் ராஜசிம்மன் **காஞ்சிகைலாசநாதர்** கோவிலைக் கட்டுவித்தார்.

7. காஞ்சிபுரத்திலுள்ள **வைகுண்டப் பெருமாள் கோவில்** இரண்டாம் நந்திவர்மனால் கட்டப்பட்டது.

8. மகாபலிபுரத்திலுள்ள **ஏழு கோவில் குடைவரைக்** கோவில்களாக அமைக்கப்படாமல், வெட்டியெடுக்கப்பட்ட கற்களைக்கொண்டு கட்டப்பட்டது.

9. தமிழ் திராவிட கோவில் கட்டடக் கலைமரபிற்கு மகாபலிபுரத்திலுள்ள **ஒற்றைக் கல்லில்** செதுக்கப்பட்டுள்ள **பஞ்சபாண்டவ இரதங்கள்** என்றழைக்கப்படும் **திரௌபதி இரதம்** , **தர்ம ராஜா இரதம் , பீமரதம் , அர்ச்சுன இரதம் , நகுல சகாதேவ இரதம்** ஆகியன சிறந்த எடுத்துக்காட்டுகளாகத் திகழ்கின்றன .

10. 1984இல் கடற்கரை க் கோவில் வளாகம் உட்பட மாமல்ல புரத்திலுள்ள நினைவுச் சின்னங்களும் கோவில்களும் மொ த்தமாக உலகப்பாரம்பரிய இடமென **யுனெஸ்கோவால்** (UNESCO) அங்கீகரிக்கப்பட்ட து.

11. பாண்டியர் கட்டடக் கலையின் சிறப்புமிக்க ஒற்றைக்கல்லில் செதுக்கப்பட்ட கோவிலுக்கு, சிறந்த எடுத்துக்காட்டு **கழுகுமலையில்உள்ள முற்றுப்பெ றாத வெட்டுவான் கோவிலாகும்**.

12. மதுரை **மீனாட்சி** அம்மன் கோவிலும் திருநெல்வேலி **நெல்லையப்பர்** கோவிலும் பாண்டியர் கட்டடக்கலைப் பாணியைப் பறைசாற்றும் எடுத்துக்கா ட்டுகளாகும்

13. **சித்தன்னவாசலிலும்** சங்கரன்கோவில் வட்ட த்தைச் சேர்ந்த **திருமலைபுரத்திலும்** முற்காலப் பாண்டியர்களின் ஓவியங்கள் உள்ளன.

14. சித்தன்னவாசல் **சமணத்துறவிகள்** வாழ்ந்த குகையாகும்

15. சோழர்களின் கோவில் கட்ட டக்கலைக்கு தமிழ்நாட்டில் திண்டிவனத்திற்கு அருகேயுள்ள **தாதாபுரத்திலுள்ள** கோவிலைக் குறிப்பிட்டுச் சொல்லலாம்.

16. முற்காலச் சோழர்களின் கோவில் கட்டக்கலை **செம்பியன் மகாதேவி பாணியைப்** பின்பற்றி அமைந்ததாகும்

17. கோவில்களில் அதிக எண்ணிக்கையில் **தேவகோஷ்டங்கள் (மாடக் குழிகள்** ) இருந்தால் அதை **செம்பியன் மகாதேவி பாணி** என வகைப்படுத்தலாம்.

18. செம்பியன் மகாதேவியால் மறுவடிவாக்கம் செய்யப்பட்ட முற்காலக் கோவில்களுக்குத் **திருப்புறம்பியத்திலுள்ள கோவில்** ஓர் எடுத்துக்காட்டாகும்.

19. தஞ்சாவூர் பெரிய கோவில் (**பிரகதீஸ்வரர் கோவில்**) **கங்கைகொண்ட சோழபுரம்** கோவில் சோழர்களின் கட்ட டக் கலை முதிர்ச்சியைப் பிரதிபலிக்கின்றன

20. தஞ்சாவூர் பெரிய கோவில் அதன் விமானம் **216 அடிகள்** உயரம் கொண்டதாகும்.

21. தஞ்சாவூர் பெரிய கோவில் சிகரம் மிகவும் உயரமாக அமை ந்திருப்பதால் அதன் சிகரம் **தட்சிண மேரு** என்றழைக்கப்படுகிறது.

22. இங்குள்ள 16 அடி நீளமும் 13 அடி உயரமும் கொண்ட மிகப்பெரும் **நந்தியின் சிலை** ஒரே பாறையில் செதுக்கப்பட்டதாகும்.

P.RATHINASAMY, BT SCIENCE, PUMS, PONNAMMALPATTI, THENI DT.

23. கங்கைகொண்ட சோழபுரத்தில் பிரகதீஸ்வரர் கோவில் **ராஜே ந்திரசோழனால்** எழுப்பப்பட்டது.

24. கும்பகோணத்திற்கு அருகேயுள்ள **தாராசுரம் கோவில்** ஐராவதீஸ்வரருக்கு (இந்திரனின் யானை வழிப்பட்ட கடவுள்) படைத்தளிக்கப்பட்டதாகும்.

25. சோழ அரசன் **இரண்டாம் ராஜராஜன்** தாராசுரம் கோவிலைக் கட்டுவித்தார்.

26. தென்னிந்தியக் கலைக்குபிற்கால ப் பாண்டியர்களின் சிறந்தசான்றாக **பிள்ளையார்பட்டி**யிலுள்ள (தமிழ்நாட்டின் காரைக்குடிக்கு அருகே) குடைவரைக் கோவிலாகும்..

27. **தேசிவிநாயகம் குகைக்கல்வெட்டி**ல் இரண்டு கைகளைக் கொண்டுள்ள கணபதியின் தும்பிக்கை வலதுபுறமாகத் திரும்பியுள்ளது.

28. விஜயநகர அரசர்களின் ஆட்சிக்காலத் தில் கட்டப்பட்ட **காஞ்சிபுரம் வரதராஜ பெருமாள்** கோவில், வேலூரிலுள்ள **ஜலகண்டேஸ்வரர் கோவில்** ஆகியவற்றிலுள்ள கல்யாண மண்டபங்கள் குறிப்பிடத்தகுந்த எடுத்துக்கா ட்டுகள் ஆகும்.

29. கல்யாண மண்டபங்களுள் மிகவும் புகழ்பெற்றது மதுரை கோவிலில் அமைந்துள்ள **புதுமண்டபமாகும்**.

30. இராமேஸ்வரம் கோவிலின் பிரகாரம் உலகிலேயே **மிகவும் நீளமான** கோவில் பிரகாரம்.ஆகும்

31. இராமேஸ்வரம் கோவில் **மூன்று** பிரகாரச் சுற்றுக்களைக் கொண்டுள்ளது.

## 10. தமிழகத்தில் சமணம், பௌத்தம், ஆசீவகத் தத்துவங்கள்

1. சமணத்தின் ஐம்பெரும் உறுதிமொழிகள்.
   1. எந்த உயிரினத்தையும் துன்புறுத்தாமலிருப்பது - அகிம்சை ;
   2. உண்மை – சத்யா ;
   3. திருடாமை – அசௌர்யா ;
   4. திருமணம் செய்து கொள்ளாமை – பிரம்மச்சரியா;
   5. பணம், பொருள், சொத்துக்கள் மீது ஆசை கொள்ளாமை – அபரிக்கிரகா

2. கி.பி முதலாம் நூற்றாண்டில் சமணத்தில் பெரும்பிளவு ஏற்பட்டு திகம்பரர், சுவேதாம்பரர் என இருபெரும் பிரிவுகள் தோற்றம் பெற்றிருந்தன.

3. சமண இலக்கியங்கள் 1.ஆகம சூத்திரங்கள் **2. ஆகமங்கள் அல்லா த இலக்கியங்கள்** என இருபெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

4. ஆகம சூத்திரங்கள் 12 சமண சமயப் புனித நூல்களைக் கொண்டுள்ளது.

5. ஆகம சூத்திரங்கள் **அர்த்த-மகதி பிராகிருத மொழியில்** எழுதப்பட்டுள்ளன.

6. ஆகமங்கள் அல்லாத இலக்கியங்கள் என்பன ஆகமங்கள்மேல் எழுதப்பட்ட **உரைகள்**, **விளக்கங்கள்**, தனிநபர்களால் எழுதப்பட்டு துறவிகளாலும் அறிஞர்களாலும் தொகுக்கப்பட்ட **நூல்கள்** ஆகியவற்றை உள்ளடக்கியதாகும்.

7. தொகுக்கப்பட்ட நூல்கள் **சூத்திரங்கள்** உரை (**மகா பாஷ்யா**) அங்கங்களையும் (**சுவேதாம்பரர்களா**ல் பின்பற்றப்படும் நூல்கள்) **உப அங்கங்களையும்** (நெறிமுறைக்குறிப்பேடுகள்) **சேடாக்களையும்** (துறவிகளுக்கான நடத்தை விதிகள்) **மூலங்களையும்** (சமணத்தின் அடிப்படைக் கோட்பாடுகள்) **பத்ரபாகுவின் கல்பசூத்ரா** போன்ற எட்டு பல்வகைப்பட்ட நூல்களையும் கொண்டுள்ளது.

8. **பஞ்சதந்திரம்** எனும் நூலில் பெருமளவில் சமணத்தின் தாக்கம் இருப்பதாக நம்பப்படுகிறது.

P.RATHINASAMY, BT SCIENCE, PUMS, PONNAMMALPATTI, THENI DT.

9. **நிர்வாண நிலையை** அடைந்து அதன் பின்னர் இவ்வுலகிற்கும் அடுத்த உலகத்திற்கு மிடையே பாதை அமைப்போரே **தீர்த்தங்கரர்கள்** ஆவர்.

10. கல்பசூத்ராவின் **ஜைனசரிதா** எனும்சமண நூல் சமண தீர்த்தங்கரர்களின் வாழ்க்கை வரலாறுகளை உள்ளடக்கமாகக் கொண்டுள்ளது.

11. சமண சமயத்தை நிறுவியவர் முதல் தீர்த்தங்கரர் **பார்சவநாதர்.**

12. மகாவீரர் கடைசியும் **24 வது தீர்த்தங்கரரும்** ஆவர்.

13. **சீவகசிந்தா மணி** சமண நூல் ஆகும்.

14. சீவகசிந்தாமணி **திருத்தக்கத் தேவர்** என்பாரால் இயற்றப்பட்டது.

15. **நாலடியார் ச**மணத்துறவி ஒருவரால் இயற்றப்பட்டதாகும்.

16. திருக்குறளை இயற்றிய திருவள்ளுவர் **ஒரு சமணர்** என நம்பப்படுகிறது

17. புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள **சித்தன்னவாசல் குகையில்** இயற்கையாக அமைந்த குகையும், மற்றொரு முனையில் ஒரு குடைவரைக் கோவிலும் தரையில் **17 சமணப்** படுக்கையும் அமைக்கப்பட்டுள்ளன.

18. கற்படுக்கைகளில் அளவில் பெரிதாக இருக்கும் ஒன்றில் கி.மு.இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த **தமிழ்-பிராமிக் கல்வெட்டு** உள்ளது

19. சித்தன்னவாசல் சுவரோவியங்கள் புகழ்பெற்ற **அஜந்தா** சுவரோவியங்களுடன் ஒப்புமைகொண்டுள்ளன.

20. பல்லவர்களின் ஆட்சிக் காலத்தில் **சமண சமயம்** செழித்தோங்கியது.

21. கி.பி.7ஆம் நூற்றாண்டில் சீனப்பயணி **யுவான் சுவாங்** காஞ்சிபுரத்திற்கு வருகைபுரிந்தார்.

22. காஞ்சியில் இரண்டு சமணக் கோவில்கள் உள்ளன. ஒன்று **திருப்பருத்திக் குன்றத்தில்** பாலாற்றின் கரையில் அமைந்துள்ள திரிலோக்கியநாத ஜைன சுவாமி கோவில் மற்றொன்று சந்திரபிரபா எனும் பெயரைக் கொண்டிருந்த தீர்த்தங்கரருக்கு அர்ப்பணிக்கப்பட்ட **சந்திரபிரபா கோவிலாகும்**.

23. 2011 ஆம் ஆண்டு மக்கள்தொகைக் கணக்கெடுப்பின்படி தமிழ்நாட்டில் சமணர்களின் எண்ணிக்கை **83,359** ஆகும். மொத்த மக்கள்தொகையில் இது **0.02** விழுக்காடாகும்.

24. **கழுகுமலையில்** கி.பி. எட்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த சமணர் கோவில் உள்ளது

25. வேலூர் மாவட்டத்தில் ஒரு குன்றின் உச்சியில் அமைந்துள்ள குகைகளின் உள்ளே கி.பி. ஐந்தாம் நூற்றாண்டைச் சேர்ந்த **சமணத் துறவிகளின் கற்படுக்கைகள்** அகழ்ந்தெடுக் கப்பட்டுள்ளன

26. **திருமலை சமணக் கோவில்** தமிழ்நாட்டின் திருவண்ணா மலை மாவட்டம், ஆரணி நகரின் அருகே அமை ந்துள்ள ஒரு குகை வளாகத்தில் அமைந்துள்ள 22 வது தீர்த்தங்கரரான **நேமிநாதருடைய** 16 மீட்டர் உயரமுடைய சிலையே தமிழ் நாட்டிலுள்ள சமணச் சிலைகளில் மிகவும் உயரமானதாகக் கருதப்படுகின்றது.

27. மதுரை **கீழக் குயில்குடியில்**அமைந்துள்ள சிற்பங்கள் பாண்டிய அரசன் பராந்தக வீரநாராயண பாண்டியன் காலத்தைச் சேர்ந்தவையாகும்.

28. **பள்ளி** என்பது சமணர்களின் கல்வி மையங்களாகும்.

29. புத்தரின் உண்மையான பெயர் **சித்தார்த்த சாக்கிய முனி கௌதமர்**என்பதாகும்

30. முழுநிறைவு எனும் இலக்கை எட்டியவர்" எனப் பொருள்படும். **கௌதம புத்தர்** மகாவீரரின் சமகாலத்தவர் ஆவார்.

31. **போதி**மரத்தின் கீழ் கௌதமர் எனும் துறவி புத்தர் எனும் ஞானியானார்.

32. **அரச வாழ்வு** (மிகை ஆர்வமும் இன்ப நுகர்வும்) **துறவு வாழ்வு** (தன்னடக்க நிலையை எய்துதல்) ஆகிய இரண்டுமே தவறு என உறுதிபடக் கூறினார்.

## P.RATHINASAMY, BT SCIENCE, PUMS, PONNAMMALPATTI, THENI DT.

33. புத்தரின் **எண்வகை வழி நல்ல எண்ணங்கள் , நல்ல குறிக் கோள்கள் , அன்பான பேச்சு, நன்னடத்தை , தீது செய்யா வாழ்க்கை , நல்ல முயற்சி, நல்ல அறிவு, நல்ல தியானம்** என்பனவாகும்

34. புத்தர் தனது போதனைகளை **பிராகிருத மொழியில்** பரப்புரை செய்தார்

35. புத்தரின் நான்கு பேருண்மைகள்

**1. வாழ்க்கை துயரம், வயோதிகம், நோய் ,இறுதியில் மரணம் ஆகியவற்றை உள்ளடக்கியதாகும்.**

**2. துயரங்கள் ஆசையினாலும் வெறுப்பினாலும் ஏற்படுகின்றன .**

**3. ஆசையைத் துறந்துவிட்டால் துயரங்களை வென்று மகிழ்ச்சியை அடையலாம்**

**4. ஒருவர் எண்வகை வழிகளைப் பின்பற்றினால் உண்மையானமகிழ்ச்சியும், நிறைவும் கைவரப்பெறலாம்**

36. பாலிமொழியில் எழுதப்பட்ட **திரிபிடகா** எனும் பௌத்தப் பொ துவிதிகள் மூன்று பிரிவுகளைக் கொண்டுள்ளன. அவை **மூன்று கூடைகள்**என்றும் அழைக்கப்பட்டன . அவை: **வினய பிடகா, சுத்த பிடகா, அபிதம்ம பிடகா**.

37. **வினய பிடகா**: இதில் பௌத்தத் துறவிகளுக்கான (பிட்சுக்கள்) விதிமுறைகள் இடம் பெற்றுள்ளன. தூய்மையான நடத்தையைப்பெற இவை கட்டாயம் பின்பற்றப்பட வேண்டும்.

38. **சுத்த பிடகா**: விவாதங்களைச் சான்றுகளாகக் கொண்டு பௌத்தத்தின் மூலக் கோட்பாடுகளைக் கூறுகின்றது.

39. **அபிதம்ம பிடகா**: இது நன்னெறிகள், தத்துவம், நுண்பொருள் கோட்பாடு ஆகியன குறித்து விளக்குவதாகும்

40. **ஜாதகங்கள்**: பௌத்த இலக்கியங்களில் காணப்படும் புத்தருடை ய வாழ்க்கை தொடர்பான பல்வேறு கதைகளைக் கூறும் நூல்

41. **புத்தவம்சா :** இது கவிதை வடிவில் எழுதப்பட்டுள்ள மரபுவழிக்கதையாகும்.

42. புத்தவம்சா கௌதமருக்கு முன்பா க வாழ்ந்த **24 புத்தர்களின்** வாழ்க்கையையும் செயல்பாடுகளையும் இது எடுத்துரைக்கின்றது.

42. **மிலிந்த பன்கா** –'மிலிந்தாவின் கேள்விகள் எனப் பொருள். கிரேக்க– பாக்டீரியன் அரசன் மிலிந்தா என்பவருக்கும் பௌத்த பிட்சுவான **நாகசேனர்** என்பவருக்குமிடையே பௌத்தத்தின் உரையாடலைக் கொண்டுள்ளது.

43. **மிலிந்த பன்கா** -- இதன் மூலம், **சமஸ்கிருதத்தில்** எழுதப்பட்டது.

44. இலங்கையின் புகழ்பெற்ற வரலாற்றுத் தொகுப்புகளான **மகாவம்சம், தீபவம்சம்** ஆகியனவற்றுள், மகாவம்சம் இலங்கை , இந்தியத அரச குலங்களைப் பற்றி கூறுகிறது.

45. **தீபவம்சம்** புத்தருடைய போதனைகளையும் அவற்றைப் பரப்பியோர் பற்றியும் பேசுகிறது.

46. முதல் பௌத்த உரையாசிரியர் **புத்தகோசாவால்** எழுதப்பட்ட **விசுத்திமக்கா** பிற்காலத்தைச் சேர்ந்தது

47. அஸ்வகோஷரால் எழுதப்பட்ட **புத்தசரிதா சமஸ்கிருதத்தில்** இதிகாச பாணியில எழுதப்பட்ட நூலாகும். இந்நூல் **கௌதம புத்தரின்** வாழ்க்கை வரலாற்றை இயம்புகிறது.

48. கூலவாணிகன் **சீத்தலை சாத்தனா**ரால் எழுதப்பட்ட **மணிமேகலை** தமிழ் பௌத்த காப்பியமாகும்

49. **கல்விப்புலத்தில்** பௌத்த சங்கங்களும் விகாரைகளும் கல்விக்கான இல்லங்களாகத் தொண்டுசெய்தன

PUMS, PONNAMMALPATTI
Padasalai.Net

50. ***நாளந்தா , தட்சசீலம், விக்கிரமசீலா*** ஆகியன மிகச்சிறந்த கல்வி மையங்கள் எனப் பெயர்பெற்றன .

51. ***விகாரா*** எனும் சமஸ்கிருதச் சொல்லுக்கு '***வாழ்விடம்***' அல்லது '***இல்லம்***' என்று பொருள்.

52. இந்தியத் தொல்லியல் துறையால் ***காவிரிப்பூம்பட்டினத்தி***ல் அகழ்வாய்வு செய்து ஒரு பௌத்த விகாரையும் ஒரு கோவிலும் கண்டறியப்பட்டது.

53. திருவாரூர் மாவட்டம் ***திருநாட்டியட்டாங்கு***டி கிராமத்தின் ஒரு வயலில் கிணறு வெட்டும்போது **1.03** மீட்ட ர் உயரமுடைய பத்மாசன கோலத்திலுள்ள புத்தரின் சிலையொன்று கிடைத்துள்ளது.

54. ஆசீவகர்கள் வினைப்பயன் (***கர்மா***), ***மறுபிறவி, முன்தீர்மானம்*** ஆகிய கோட்பாடுகளில் நம்பிக்கை கொண்டிருந்தனர்.

55. ஆசீவகப் பிரிவின் தலைவர் ***கோசலா மன்காலிபுத்தா*** ஆவார்.,

56. மௌரியப் பேரரசர் ***அசோகரும்*** அவருடைய பேரன் ***தசரதாவும்*** ஆசீவர்களை ஆதரித்தனர்

**P.RATHHINASAMY**
**BT. SCIENCE,**
**PU MIDDILE SCHOOL**
**PONNAMMALPATTI**
**THENI DT**

Padasalai.Net

PUMS, PONNAMMALPATTI